# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்.

புரட்டாதி

213 ஆவது மலர்

2015




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்**
**புன்மையாற் காணப் படும்.**

**பொருள் :** ஒருவனது புறங்கூறும் இழிந்த குணத்தைக்கொண்டு அவன் பிறரது நல்ல செயலை எடுத்துக்கூறும் இயல்பில்லாதவன் என்று அறியப்படும். (185)

**பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்**
**திறன் தெரிந்து கூறப்படும்.**

**பொருள் :** பிறருடைய குற்றத்தைக் கூறுகின்றவனது இழிந்த செயல் களுள்ளும் மிக இழிந்தவைகளைப் பிறர் ஆராய்ந்து எடுத்துக் கூறுவர். (186)

# நற்சிந்தனை

**மறப்பேனோ குருநாதன் தன்னை**

**முத்தி நல்குமே**

ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



கறங்கு போலக் கலங்கு மனத்தைத்
திறங்கொள் யோக சித்தியால் நிறுத்தி
உறங்கி யுறங்கா திருந்து நோக்கிற்
பிறப்பிறப் பென்பது பிராந்தியா கும்மே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 41

கங்குலும் பகலு மில்லாக் காட்சியன்
சங்கரன் தாணு சம்பு சதாசிவன்
பொங்கர வணிந்த பூத நாதன்
மங்கையோர் பாகன் மான்மழுக் கரனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 42

சத்தியுஞ் சிவமும் தானாய் நின்றவன்
பத்திசெ யடியரைப் பரகதி சேர்ப்பவன்
எத்திக்கு மாகி யிருக்கு மிறைவன்
சித்தத் துள்ளே தித்தித் திருக்குமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 43

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்



வெளியீடு -2 சுடர் - 213

2015 புரட்டாதி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நலம் தரும் நவராத்திரி | ஆர்.வீ. கந்தசாமி | 01 -02 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 03 -05 |
| சரபோஜியும் அபிராமியும் | அ. சுப்பிரமணியம் | 06 -07 |
| வித்தகா உன் ஆடல் ஆர்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 08 -10 |
| நன்மங்கையரைத் தாய்போற்... | முருகவே பரமநாதன் | 11 -13 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 14 -16 |
| வகுத்தான் வகுத்தவகை | ஆ. இராசரெத்தினம் | 17 -18 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 19 -20 |
| சான்றோர்க்கு அழகு | நா. நல்லதம்பி | 21 -22 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 23 -28 |
| நீ துயரப்படுகின்றாய் சுகம்... | கே.எஸ். சிவஞானராஜா | 29 -30 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 31 -33 |
| அருளில்லார்க்கு இல்லை... | சு. சிவராசா | 34 -37 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 38 -40 |
| நல்லூர் முருகன் பேரில்... | வே. தருமலிங்கம் | 41 -44 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 45 -47 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 48 -49 |
| தமிழகத் திருக்கோயில் வரிசை | வல்வையூர் அப்பாண்ணா | 50 -52 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் ஆவணிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

சாதனையாக மிளிரும் 212ஆவது ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையை ஆசிரியர் திரு க. ஸ்ரீச்சந்திரன் அவர்கள் மேற்கொண்டார்கள். அவர் தமது உரையில் ஆச்சிரமம், பேரவை என்பன மேற்கொண்டுவரும் பல்வேறு பணிகள் பற்றியும் விபரமாக எடுத்துக் கூறினார்கள்.

மக்கள் நன்மைக்காக இவ்வாறு செயற்பட்டுவரும் இவர்கள் ஞானச்சுடர் சஞ்சிகையையும் தொடர்ச்சியாக வெளியிடுவது இவர்களுக்கேயுரிய தனித்துவமான சிறப்பு என்பதையும் சுட்டிக் காட்டினார்கள். இத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் இம்மலரை வெளியீடு செய்துவைப்பதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைவதாகக் கூறியதுடன் தொடர்ந்து இம்மலர் பிரகாசிக்க சந்நிதியானை வேண்டி நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

பிரபல எழுத்தாளரும் அதிபருமாகிய க. நடேசு (தெணியான்) அவர்கள் ஆவணிமாத மலருக்கான மதிப்பீட்டுரையை வழங்கினார்கள். ஆச்சிரமம் வயிற்றுப் பசியைப் போக்கும் பணியை மட்டும் மேற்கொள்ளாது ஞானப் பசியையும் போக்கி வருவதென்பது சாதாரண விடயமல்ல எனக் குறிப்பிட்டு இத்தகைய பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருவதையும் அடியார்களுக்கு எடுத்துக் காட்டினார்கள்.

எமது சமுதாயத்தின் சிறப்பை வெளிப்படுத்தும் பலவித ஆக்கங்கள், பலவித கோணங்களில் மலரில் இடம்பெற்று வருவது மிகவும் போற்றப்படவேண்டியது என்று கூறியதுடன் ஆக்கங்களைத் தொடர்ந்து வழங்குவோரையும் ஒரு கணம் சிந்திக்க வைத்தார். வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களுக்கு இம்மலர் ஒரு பாலமாக அமைந்துள்ளது என்பதைச் சபையில் உள்ள அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

இறுதியாக மலரில் இடம்பெற்ற கட்டுரைகள்பற்றி பொதுவான கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்த தெணியான் அவர்கள் அடியார்கள் ஞானச்சுடரை வாசிப்பதன்மூலமே முழுமையான நிறைவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெளிவுபடுத்தி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

பொதுவாக ஒரு மனிதனது வாழ்க்கை ஆத்மீகம், லௌகீகம் ஆகிய இரண்டு விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இந்த இரண்டு வகையான அம்சங்களையும் எடுத்து நோக்கும்போது இவை ஒவ்வொன்றிலும் சிறப்பான நிலையை அடைவதில் பல விடயங்கள் தொடர்புபட்டிருந்தாலும் இவை இரண்டிற்கும் பொதுவாகக் கூறக்கூடியதாக ஒரு விடயம் அமைந்துள்ளதை நாம் உணர முடிகின்றது.

ஆத்மீக வாழ்க்கைக்கு ஒரு குருவினது நேரடியான பங்களிப்போ அல்லது மானசீகமான ஒரு குருவைப் பின்பற்றி ஒருவர் செயற்படுவதோ அவசியமாக உள்ளதை நாம் காணமுடிகின்றது. செல்லப்பா சுவாமிகளது குருவருள் யோகர் சுவாமிகளை ஆற்றுப் படுத்தியது. இந்தக் குருவருளே யோகர் சுவாமிகளது தெய்வீக வாழ்க்கையில் காரணமாக அமைந்தது. சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரின் குருவருள்தான் சுவாமி விவேகானந்தர் ஆத்மீக வாழ்க்கையில் மிகவும் உயர்வான நிலையை அடைவதற்கும் அவர் உலகம் போற்றும் உயர்ந்த ஆத்மீகத் தலைவராகவும் உயர்வதற்குக் காரணமாக இருந்தது.

இது போன்றதொரு நடைமுறை தனிப்பட்ட மனிதனது லௌகீக வாழ்க்கையில் உயர்வதற்குக் காரணமாக இருப்பதை நாம் காணமுடிகின்றது. உதாரணமாக ஒருவன் கல்வியில் முன்னேற்றமடைவதற்கு நல்ல ஆசான்களது வழிகாட்டல், நல்ல நண்பர்களது சகவாசம் என்பன எல்லாம் அவசியமாகின்றது. தொழில் ஸ்தானத்தில் ஒருவர் உயர்வடைவதற்கும் நல்ல வழிகாட்டல், நல்லவர்களது ஆதரவு என்பன அவசியமாக உள்ளது. இதேபோன்று சமூக வாழ்க்கையில் ஒருவர் உயர்வதற்கும் நல்லவர்களது வழிகாட்டல் முன்மாதிரி என்பன இருப்பது அவசியமாகின்றது.

இந்த உண்மையை உணர்ந்து செயற்பட்டால் இவ்வுலகில் மனிதநேயம், பரஸ்பரம், நல்லுறவு, ஒற்றுமை, பெரியோரை மதித்தல், ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்தல் போன்ற பல விடயங்களில் நாம் தெளிவுபெற முடியும். எங்களால் மட்டும் எதனையும் தனித்து சாதிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து ஆணவம், அகம்பாவம் என்பவை அற்று அமைதியான வாழ்க்கையை வாழமுடியும். இதன்வழி நாம் ஒழுகுவோமானால் ஒரு கட்டுப்பாடான சமூகத்தை உருவாக்கலாம்தானே.

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி எழுந்தருளும் திருமுருகனின் பிள்ளைத்தமிழ்

## 1. காப்புப் பருவம் (தொடர்...

### விநாயகப் பெருமான்

செந்தமிழின் பாரதத்தை
மேரு வெனுந் திருவேட்டில்
திருமருப் பொன் றொடித் தெழுதியும்
திரு நிறை கருமங்களை
தனைமுதற் போற்றியே
திறத்தினர்க் கருணை யளித்தும்
கந்தநறு மலர் தூவி
பூசை செய் ஔவையைக்
கைதூக்கிக் கைலை சேர்த்த
கற்பகப் போதகக்
கரிமுகக் கடவுளை
கனிந்து பணிந் தேத்து வேனே
கந்தமுரு கேச னெனக்
கருணைவடி வேலனென
கார்மயில் வாக னெனவே
கடம்பணியுங் குகனென
கயிலை சிவன் மகனென
கடி வினையைக் கடிபவனென
வந்தனைசெய் யடியவரை
வாழ்விக்கும் வள்ளலென
வாயார வாழ்த்திப் புகழும்
வடமா நிலத் தொண்டை
மானாற்றங் கரைக் கோயில்
வைகுமுரு கனைக் காக்கவே.

-முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

# புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr. M. யோகேஸ்வரதேவர்**
(நெல்லியடி, கரவெட்டி)

**Dr. K. இராதாகிருஷ்ணன்**
(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

**Dr. G. உதயசீலன்**
(சுதுமலை, மானிப்பாய்)

**தலைவர்**
(தெல்லிப்பளை. ப.நோ.கூ.ச. தலைமையகம்)

**க. சொர்ணவடிவேல்**
(கதிர்காமசிங்கம் அன்சன்ஸ், அளவெட்டி)

**வே. தர்மராசா**
(பொதுமுகாமையாளர், சுண்ணாகம்)

**செ. புவனேந்திரராசா**
(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

**செல்லையா சிவசம்பு**
(இளை.அதிபர், வளலாய்)

**த. சிவகுருநாதன்**
(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**காரை. M.P அருளானந்தன்**
(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

**இ. சுப்பிரமணியம்**
(இளை.கிராமசேவையாளர், ஏழாலை)

**ப. நடராசாக்குருக்கள்**
(ஆவரங்கால், புத்தூர்)

**சீ. முருகவேள்**
(கிராமசேவையாளர், இடைக்காடு)

**இ. ராதாகிருஷ்ணன்**
(ஏழாலை மத்தி, ஏழாலை)

க. ஸ்ரீஸ்கந்தராசா
(இளை. அதிபர், அச்சுவேலி)

க. குமாரதாசன்
(பொது சுகாதார பரிசோதகர், தும்பளை)

க. இரத்தினம்
(இளை. கிராமசேவையாளர், கரணவாய்)

சோ. தனராசா
(வாணிமஹால், வட்டுக்கோட்டை)

நாகேந்திரம் கண்ணம்மா
(மானிப்பாய்)

வ. கந்தசாமி
(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)

சி. சிவச்செல்வம்
(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)

கு. மதனமோகன்
(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

K. மங்கையற்கரசி
(நல்லூர், யாழ்ப்பாணம்)

ஆ. திருநாவுக்கரசு
(இணுவில் மேற்கு)

நா. கனகலிங்கம்
(தபால் வீதி, கொக்குவில்)

ரஞ்சனதாஸ் ஜஷாந்
(கொக்குவில்)

B.R. ரஞ்சன்
(யாழ்ப்பாணம்)

A. சிவதாசன்
(மதவடிலேன், சுதுமலை)

சு.சண்முகசுந்தரம்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

**க. தெய்வானைப்பிள்ளை**
(V.M. றோட், பருத்தித்துறை)

**பார்த்தசாரதி விஜயகுமார்**
(சுழிபுரம்)

**திருமதி. ப. தேவமனோகரன்**
(கந்தபுஷ்கரணி, நவாலி)

**அ. ஆறுமுகம்**
(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

**கயிலைநாதன் மங்களகாந்தி**
(வேழலகம், ஆனைக்கோட்டை)

**இ. இந்திரலிங்கம்**
(இணுவில் கிழக்கு)

**இ. சர்வேஸ்வரன்**
(கலைவாணி வீதி, கோண்டாவில்)

**த. விசயகுமாரன்**
(பழம்றோட், கந்தர்மடம்)

**செல்வி.சு. பகீரதி**
(செட்டித்தெரு, நல்லூர்)

**கனகேஷ்வரன் பிரகாஷ்**
(கைதடி கிழக்கு)

**சி. செல்வரத்தினம்**
(புன்னாலைக்கட்டுவன்)

**ஐ. ராமச்சந்திரா**
(லவ்லேன், உடுவில்)

**சி. சகுந்தலாதேவி**
(வங்களாலேன், மல்லாகம்)

**அ. ராஜ்சங்கர்**
(உரும்பராய்)

**ம. நாகேஸ்வரி**
(நவிண்டில்)

**த. லதாசந்திரிக்கா**

(மகாத்மா வீதி, நெல்லியடி)

**க. நற்குணராஜா**

(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)

**செ. இராஜேஸ்வரி**

(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)

**ச. குகதாஸ்**

(நீர்வேலி)

**த. பூபாலன்**

(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)

**கா.ஆ. சச்சிதானந்தம்**

(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

**மா. கிருஸ்ணம்மா**

(கைதடி, நுணாவில்)

**வ. கதிரவேலு**

(கோப்பாய் தெற்கு)

**நா. கமலநாதன்**

(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)

**செ. சோதிப்பெருமாள்**

(சரஸ்வதி மஹால், இணுவில்)

**கி. சிவப்பிரகாசம்**

(புலோலி தெற்கு, புலோலி)

**வ. வேல்முருகன்**

(அச்சுவேலி)

**S. சுந்தரசிவம்**

(பண்டத்தரிப்பு)

**சி. வேலாயுதம்**

(இளை. அதிபர், வதிரி, கரவெட்டி)

**இ. ஜெயலக்சுமி**

(யாழ்ப்பாணம்)

# நலம் தரும் நவராத்திரி

– திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள் –

இந்து சமய மக்கள் கொண்டாடும் விழாக்களில் நவராத்திரி விழா மிகவும் சிறப்பானதாகும். நவராத்திரிகளில் வசந்த நவராத்திரியும் சாரதா நவராத்திரியும் புகழ் பெற்றவை. வசந்த நவராத்திரி சித்திரை மாதத்தின் அமாவாசையை அடுத்த பிரதமை முதல் நவமி வரையிலான ஒன்பது நாட்கள் சக்திகளை வழிபடுவதற்குரியவை.

புரட்டாதி மாதத்தின் அமாவாசையை அடுத்துவரும் பிரதமை முதல் நவமி வரையிலான ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவது சாரதா நவராத்திரியாகும். இதுவே புகழ் பெற்றது. அனைத்துலகிலும் இந்து மக்களாலும் பிறராலும் கொண்டாடப்படுவது. பரம்பொருள் ஒன்று, அது செயற்படும்போது இரண்டாக விரிந்து சக்தி ஆகின்றது. சிவனை வழிபடும் ஒரு ராத்திரியாக சிவராத்திரி விளங்குகின்றது. பல சக்திகளை ஒன்பது ராத்திரிகளில் வழிபடுகின்றோம். அதுவே நவராத்திரியாகும்.

ஆதி சிவனுடன் என்றும் உறைபவள் ஆதிபராசக்தி, எல்லா சக்திகளுக்கும் தாய் இவளே, இவளை நவராத்திரியின்போது முதல் மூன்று நாட்களும் வீரத்தைத் தரும் கிரியா சக்தியாக துர்க்கை அம்மனாகவும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தைக் கொடுக்கும் இச்சா சக்தியாக இலட்சுமியாகவும், இறுதி மூன்று நாட்களும் ஞானத்தை அருளும் சரஸ்வதியாகவும் கருதி வழிபடுகின்றோம்.

முப்பெரும் தேவியரில் முதல் தெய்வமான துர்க்காதேவியை ஆதிகாலத்தில் மன்னர்கள் வெற்றித் தெய்வமாகப் போற்றி வழிபட்டனர். போருக்கு முன்பும், போரில் வெற்றி கொண்ட பின்பும் அவர்கள் துர்க்கா தேவியை வழிபடுவது வழக்கமாகும். துர்க்கை வழிபாடு ஆதிகாலத்தில் மிகவும் செல்வாக்குடன் மேலோங்கி இருந்தமையைப் புராணங்களால் அறிய முடிகின்றது. துர்க்காதேவிக்கு இலங்கையிலும் இந்தியாவிலும் தனிக் கோவில்களும், தனிச் சந்நிதிகளும் இருக்கின்றன. தீயதைச் சங்கரிக்கும் வடிவம் துர்க்கா.

இலட்சுமி வழிபாடு மிகவும் தொன்மையானதும் பழமையானதும் ஆகும். செல்வத்திற்கு அதிபதியான இலட்சுமியைப் பற்றிப் பல புராணக் கதைகள் உள்ளன. இத்தேவி பாற்கடலில் அவதரித்தவள், நாராயணனின் பத்தினி அவரது மார்பில் குடியிருப்பவள், அலைமகள், மற்றும் தாமரைச் செல்வி, திருமகள், ஸ்ரீதேவி எனப் பல பெயர்களாலும் அழைக்கப்படுகின்றாள்.

சிலப்பதிகாரத்தில் மாமகள்- இலட்சுமி, நாமகள்- சரஸ்வதி, கோமகள்- துர்க்கை என முப்பெரும் தேவியரைக் குறிப்பிடப்படுகின்றது. வீரம், செல்வம், கல்வி மூன்றும் மனிதர்களுக்கு என்றும் தேவையென்பதையும், அவை ஒன்றோடொன்று இணைந்தவை என்பதையும் நவராத்திரி வழிபாடு உணர்த்துகிறது.

நவராத்திரி விழா கலைமகள் விழா, கலைவாணி விழா, சரஸ்வதி பூசை எனப் பல பெயர்களால் நவராத்திரிக் கொண்டாட்டங்கள் வீடுகள், அலுவலகங்கள், தொழிலகங்கள், பாடசாலைகள், கோவில்கள் ஆகியவற்றில் இடம்பெறுகின்றன. இந்தியாவின் பல மாநிலங்களில் “தசரா” என இவ்விழா கொண்டாடப்படுகிறது.

நவராத்திரி விழாவின்போது வீடுகளில் முப்பெரும் தேவியரை வழிபட்டாலும், சரஸ்வதிதேவியை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். கல்வி கலைகள் தொழில்கள் எல்லாவற்றிற்கும் சரஸ்வதியே அதிபதியாவாள். தொழில்கள் இருவகைப்படும். அவையாவன, கைத்தொழில், புலமைத் தொழில் என்பன. கைத்தொழில் செய்பவர்கள் தாங்கள் பயன்படுத்தும் கருவிகள் அனைத்தையும் சரஸ்வதி முன் அலங்கரித்து அடுக்கி வைத்து வழிபடுவது ஆயுத பூஜை யாகும். புலமைத் தொழிலுக்குத் தேவையான நூல்கள், மிருதங்கம், வயலின் போன்றவற்றைப் புத்தகத்து உள்ளுறையும் தெய்வமான சரஸ்வதி திருமுன் வைத்து வழிபடுவது சரஸ்வதி பூசையாகும்.

நவராத்திரி ஒன்பதாம் நாள் மகா நவமியன்று ஆயுதபூசையும் சரஸ்வதி பூசையும் ஒருங்கே நடைபெற்று நவராத்திரி விழா நிறைவு பெறும். ஒரு குறிப்பிட்ட புனிதமான இடத்தில் நவதானியங்களை விதைத்து முப்பெரும் தேவியரை ஒரு கும்பத்தில் எழுந்தருளச் செய்து ஒன்பது நாளும் வழிபடுகின்றனர். இவை பசுமையுடன் செழித்து வளர்ந்தால் குடும்பத்தில் செல்வங்கள் பெருகும் என நம்புகின்றனர். பத்தாம் நாள் ஆலயங்களில் வெற்றித் திருவிழாவான "விஜயதசமி" நடைபெறும் இதனை "மானம்பூ" என்பர்.

விஜயதசமி ஒரு வெற்றித் திருநாள். ஆணவத்தை - வீரமும், வறுமையை- செல்வமும், அஞ்ஞானத்தை- ஞானமும் வெற்றிகொண்ட பொன் நாளாகும். நல்ல செயல்களைச் செய்வதற்கும் குழந்தைகட்கு கல்வியைத் தொடங்குவதற்கும் விஜயதசமி ஒரு சிறந்த நாளாகும்.

பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் காலத்தில் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை வன்னிமரப் பொந்திலிருந்து மீண்டும் எடுத்தநாள் இதுவாகும். கோவில்களில் வன்னிமரத்தை, அல்லது கன்னிவாழையை நட்டு வெட்டுவது வழக்கமாகும். இந்து தர்மத்தின் அடிப்படை நவராத்திரியாகும்.

"எது புரிந்து எவ்வகை யாயினும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்"

எனப் பாரதியார் குறிப்பிடுவதற்கிணங்க நவராத்திரி விரதமிருந்து பயன்களைப் பெறுவோமாக. நவராத்திரி, விஜயதசமி விழாக்களைக் கொண்டாடி எமது பண்பாட்டை நிலை நிறுத்துவோமாக.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒக்டோபர் 10 | புரட்டாதி | 23 | சனி | அருணந்தி சிவாச்சாரியார் |
| ஒக்டோபர் 13 | புரட்டாதி | 26 | செவ்வாய் | சங்கரபண்டிதர் |
| ஒக்டோபர் 27 | ஐப்பசி | 10 | செவ்வாய் | திருமூலர் |
| நவம்பர் 11 | ஐப்பசி | 25 | புதன் | மெய்கண்டதேவர் |

# திருச்சதகம்

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

உயர்வு குறித்து வந்த திரு என்னும் அடையடுத்த சதகம் என்பது உயர்ந்த கருத்துக்களையுடைய நூறு திருப்பாடல்களால் அமைந்த பகுதியாகும். சதம்- நூறு வடமொழி, சதகம் நூற்றினையுடையது. இந்த நூறு பாடல்களும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளன. அன்றியும் அவை நூறும் ஒரேவகைச் செய்யுளால் அமையாது பத்துப் பத்துப் பாடல்கள் ஒவ்வொரு வகைச் செய்யுளால் அமைந்துள்ளன. இத்திருச்சதகத்தின் உட்பொருள் பக்தி வைராக்கிய விசித்திரம் என்பது, இறைவனிடத்தும் பற்றும் உலகப் பொருள்களிடத்துப் பற்றின்மையும் உளவாகும்பொழுது உண்டாகும் அழகு என்பது இதன் பொருள். இச்சதகம் நுதலிய பொருள் "சத்தியஞானந் தருதே சிகர்மோகஞ் சதகமதாம்" எனத் திருப்பெருந்துறை புராணகாரர் கூறுவர். இவ்வழகினை, மெய்யுணர்தல், அறிவுறுத்தல், கட்டறுத்தல், ஆத்துமசுத்தி, கைம்மாறு, கொடுத்தல், அநுபோகசுத்தி, காருணியத்திரங்கல், ஆனந்தத்தழுந்தல், ஆனந்த பரவசம், ஆனந்தாதீதம் எனப் பத்து வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றினையும் பப்பத்துத் திருப்பாடல்களால் அடிகள் விளக்கியுள்ளார்.

### I. மெய்யுணர்தல்

**கட்டளைக் கலித்துறை**

திருச்சிற்றம்பலம்

5. மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

**ப.ரை:** உடையாய்- எல்லா உயிர்களையும் உலகங்களையும் உடையவனே, உன்விரை ஆர் கழற்கு- உனது நறுமணம் பொருந்திய திருவடியை வணங்குவதற்கு, மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து- உடம்பு தானாகவே மயிர் சிலிர்க்கப்பெற்று நடுநடுங்கி, கை தான் தலைவைத்து- கை தானாகவே சிரசிற் குவியப்பெற்று, கண் நீர் ததும்பி- கண்களில் நீர் ததும்பி, உள்ளம் வெதும்பி- உள்ளம் உருகி, பொய் தான் தவிர்ந்து- நிலையற்றவற்றின் பற்று தானாகவே நீங்கப்பெற்று, உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்- உனக்கு வணக்கம் வெல்க வெல்க வணக்கம் என்று கூறும், கை தான் நெகிழவிடேன்- ஒழுக்க நெறியைக் கைவிடமாட்டேன்; என்னைக் கண்டு கொள்- ஆயினும் என்னிலை பிறழா வண்ணம் அடியேனைப் பார்த்துக் காத்தருள்க.

உடையவனே, நின் திருவடியை வணங்குதற்கு மெய் தானாகவே மயிர் சிலிர்க்கப் பெற்று விதிர் விதிர்த்துக் கைதான் தலைவைத்துக் கண்களில் நீர் ததும்பி உள்ளம் உருகிப் பொய்தான் தவிர்ந்து நினக்கு வணக்கம் வெல்க வெல்க வணக்கம் என்று கூறும் ஒழுக்க நெறியைக் கைவிடமாட்டேன்; ஆயினும் என்னிலை பிறழாவண்ணம் அடியேனைப் பார்த்துக் காத்தருள்க என்பதாம்.

மெய்- உடம்பு. அரும்புதல்- மயிர் சிலிர்த்தல். உடம்பு இடைவிடாது நடுங்கியமை தோன்ற 'விதிர்விதிர்த்து' என்றார். விதிர்விதிர்த்து- மிக நடுங்கி எனினுமாம். மெய்தானரும்பல் விதிர்விதிர்த்தல் முதலியன அன்பின் மிகுதியாலாகிய மெய்ப்பாடுகள்.

"மைத்தழையா நின்ற மாமிடற்றம்பலவன் கழற்கே
மெய்த்தழையா நின்ற வன்பினர் போல விதிர்த்து" (102)

எனத் திருக்கோவையாரினும்,

"கண்டு தொழுது கரசர ணாதி யங்கமெலாம்
கொண்ட புளகங்க ளாக எழுந்தன்பு கூரக்கண்கள்
தண்டுளி மாரி பொழியத் திருமூலட் டானர்தம்மைப்
புண்டரி கக்கழல் போற்றித் திருத்தாண் டகம்புனைந்து"

நாவு 222.

"எழுதாத மறையளித்த எறித்தறியும் பெருமானைத்
தொழுதார்வம் உறநிலத்தில் தோய்ந்தெழுந்தே அங்கமெலாம்
முழுதாய பரவசத்தின் முகிழ்த்தமரத்தமயிர்க் கால்மும்க
விழுதாரை கண்பொழிய விதிர்புற்று விம்மினார்"

நாவு 335

எனப் பெரியபுராணத்தும் வருவன காண்க. தெய்வ மணங்கமழுந் திருவடியாதலின் 'விரையார் கழல்' என்றார். மணங்கமழ் தெய்வத்தின் நலங்காட்டி என்றார் திருமுருகாற்றுப் படையிலும், இனி விரையார்கழல் என்பதற்கு அன்பரிட்ட நறுமலரான் மணம் கமழும் திருவடி எனினுமாம். "விண்ணுஞ் செலவறியா விரையார் கழல்" (256) என்னும் திருக்கோவை யார் உரையில், 'எல்லாப் பொருளையும் கடந்து நின்றனவாயினும் அன்பர்க் கணியவாய் அவரிட்ட நறுமலரான் வெறிகமழுமென்பது போதர வெறியார் கழல் என்றார் எனப் பேராசிரியர் உரைத்தமையுங் காண்க. வெதும்பல்- உருகுதல் என்னும் பொருட்டு, தவிர்ந்து என்பது தவிரப் பெற்று என்னும் பொருளில் வந்தது. உன்னை- உனக்கு. உருபு மயக்கம். சய என்பது வெல்க என வாழ்த்தியவாறு. கை- ஒழுக்கம். "கலந்த நோய் கைம்மிக" (கலி 46:2) என்புழிப்போல,

உள்ளம் வெதும்பல், பொய் தவிர்தல் என்பன மனத்தின் தொழிலாதலாலும், போற்றி சயசய போற்றி என்பது வாக்கின் தொழிலாதலாலும், விதிர்விதிர்த்தல் கைதலை வைத்தல் கண்ணீர் ததும்பல் என்பன காயத்தின் தொழிலாதலாலும் மனம் வாக்கு காயம் என்னும் முக் கரணங்களாலும் வழிபடா நின்றேன் என்பது கூறினார். ஆயினும் இந்நிலைமை பிறழாவண்ணம் பார்த்துக் காத்தருள்க என்பார். 'என்னைக் கண்டுகொள்' என்று அருளிச் செய்தார்.

தான் நான்கனுள் முதன் மூன்றும் தானாகவே என்ற பொருளில் வந்தன. பின்னது அசைநிலை, அரும்பி, விதிர்விதிர்த்து தலைவைத்து, ததும்பி, வெதும்பி என்னும் சினைவினைகள்,

"அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு
வினையோ ரனைய வென்மனார் புலவர்" தொல்வினை 24

என்ற விதிப்படி என்னும் என்ற முன்வினையொடு முடிய அது கை என்னும் பெயரினைக் கொண்டு முடிந்தது.

உயிர்ப்பொருள் உயிரில்பொருள் அறிவுப்பொருள் அறிவில்பொருள் என்ற பகுப்பினுட் பட்ட எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்டான் இறைவனாதலின் 'உடையாய்' என்றார். "எல்லாமுன் உடைமையே எல்லாமுன் அடிமையே" எனத் தாயுமானவர் அருளியமையுங் காண்க.

இதன் கண் பொய்தான் தவிர்ந்து மெய்யுணருங்கால் மெய்யரும்புதல் முதலிய செயல்கள் உளவாமாகலின் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

(தொடரும்...

## பிணி தீர்க்கும் சனிபகவான்!

சிவனால் ஈஸ்வரபட்டம் பெற்ற சனீஸ்வரப் பெருமானுக்கு இலங்கை திருகோணமலையில் ஓர் ஆலயம் உள்ளது. இதனால் திருகோணமலை மாநகருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. இந்நகரின் மத்தியில் 'மடத்தடி' எனும் இடத்தில் கிருஷ்ண பெருமான் கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ளது இக்கோயில்.

சனிபகவானைப்போல் கொடுப்பாருமில்லை, கெடுப்பாருமில்லை என்பர். இவர் அள்ளியும் கொடுப்பார் கிள்ளியும் எடுப்பார் என்று ஐதிகம் சொல்கிறது. எந்த நட்சத்திரம், ராசியில் பிறந்தவரானாலும், ஒவ்வொருவரும் இப்பகவானின் கண்பார்வைக்கு ஆளாகி வருகின்றனர். வணங்குவோர் கஷ்டம் நீங்கி வரமளிப்பவர் என்பதால், தங்கள் தோஷம் நீங்க பரிகாரங்கள் செய்து சனி பகவானின் கடாட்சத்தைப் பெற்று சீரும் சிறப்பாக வாழவேண்டும் என்று பிரார்த்திக்கின்றார்கள். சனியின் பாதிப்புக்கு ஆளானவர், ஆளாகாதவர் என வேறுபாடு இல்லாமல் புரட்டாசி சனி வார ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து நான்கு சனிக்கிழமைகள் விரதம் நேர்ந்து சனீஸ்வரப் பெருமானுக்கு எள்ளுப் பொட்டலம் எரித்து வணங்கி, வீட்டில் காகத்திற்குப் படைத்து, அவை உண்ட பின் தங்கள் விரதத்தைப் பூர்த்தி செய்கின்றார்கள். இது திருகோணமலையில் வருடக்கணக்காக நடந்துவரும் ஒரு புனித உற்சவமாகும்.

சரித்திரத்தை ஆராயும்போது, இவ்வாலயம் கி.பி. 1885இல் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஆரம்ப காலத்தில் பரிபாலனம் செய்த குருக்களுக்கு சுகவீனம் ஏற்பட்டதாகவும் அதனை தீர்ப்பதாக கனவில் ஓர் காட்சி ஏற்பட்டதாகவும், உடல்நலம் சீரானதால், இவ்வாலயத்தை நேர்த்தியாகக் கட்டி முடித்து, இந்தியாவிலிருந்து கர்ப்பக் கிரகத்திற்குரிய விக்ரகத்தையும் எழுந்தருளியையும் (உற்சவர்) கொண்டு வந்து இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்டார்கள்.

இலங்கையில் இது ஒன்றே சனீஸ்வரப் பெருமான் கோவில் என்ற படியால் பல இடங்களிலிருந்தும் நிறைய பக்தர்கள் வந்து வழிபடுகின்றார்கள். தலவிருட்சம் தாண்டிமரம்.

இந்தியாவின் திருநள்ளாறு போன்ற, திருகோணமலையில் உள்ள சனிபகவான் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டுவோர் தரிசித்து வரலாம்.

# சரபோஜியும் அபிராமியும்

—திரு அ. சுப்பிரமணியம் அவர்கள்

தேவார முதலிகள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் அவர்களின் தேவாரப் பாடல்பெற்ற திருத்தலம் திருக்கடவூர். இது தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ளது. இங்கிருக்கும் திருத்தலம் அபிராமியம்மையாவர். இது தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரியாற்றின் தென்கரையில் உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப்பெற்ற கோயில். விண்ணகத் தேவர்களும் மண்ணகம் வந்து அபிராமி அம்மையை வழிபட்டுத் திருவருள் பெற்றுச் செல்வதாக ஐதீகம். மராட்டிய மன்னன் சரபோஜி தினமும் காவிரியில் நீராடி அபிராமி அம்மையை வழிபட்டுச் செல்வதுண்டு. விசேடமாக மாதந்தோறும் வருகிற அமாவாசைத் தினத்தை ஒரு பிதிர்க்கடனாக நடாத்தி ஏழைகளுக்கு அன்னதானமும் செய்வார்.

அன்பர் யாவருக்கும் நல்லருள் பாலிக்கும் அபிராமி அம்பிகையை அந்தணகுலத் திலகமான அமிர்தலிங்கம் ஐயரும் அவரது மகன் சுப்பிரமணிய ஐயரும் பக்தி சிரத்தையுடன் பூஜித்து வந்தனர். சுப்பிரமணிய ஐயரை அபிராமிப்பட்டர் என்றும் அழைப்பர் கற்றோர். இவர் அபிராமி அம்பிகைமீது பாடும் பாடல்களின் பொருள் புரிந்து போற்றுவர். ஆனால் இவரது பாடல்களின் பொருள்புரியாத சிற்றறிவினர் முட்டாள்தனமாக வேறு துட்ட தேவதைகளை வாலாயம் பண்ணி அந்தமரபிற்கு ஒவ்வாத பாடல்களைப் பாடும் விசரன் என்று தூற்றவும் துன்புறுத்தவும் செய்தனர். இவற்றையெல்லாம் பட்டர்பிரான் பொருட்படுத்தினாரில்லை. ஆனால் கூடியவரை அத்துட்டரிடமிருந்து விலகியிருக்கவே விரும்பினார்.

இதனிடையே வழமைபோன்று சரபோஜி மகாராஜா காவிரியில் நீராடித் தை அமாவாசைத் தினத்தில் அபிராமி அம்பிகையைத் தொழுது பிதிர்க்கடமைக்காக வந்திருந்தார். ஆலய அதிகாரிகளும் அமிர்தலிங்க ஐயாவும் வரவேற்று உபசாரம் செய்து அம்பிகைக்கு அபிடேக ஆராதனை முடித்துத் தூபதீப நைவேத்தியம் வைத்துப் பிதிர்க்கடனாற்றி ஏழைகட்கு அன்னவஸ்திரம் தானம் பண்ணி, விபூதி, சந்தனம், குங்குமம், பிரசாதம் காளாஞ்சி பெற்று உள்வீதி வந்தபோது ஓரிடத்தில் நிஷ்டையிலிருந்த பட்டர்பிரானைக் கண்டார். அருகில் நின்று துன்புறுத்திய துட்டரையும் பார்த்தார். அவர்களிடம் "இவர் யார்?" என்று கேட்டார். நின்றோர் " அது ஒரு விசரன்"என்றனர். பட்டரின் அருகே சென்ற அரசன் "இன்று என்ன திதி?" என்றான். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாகியுள்ள அம்பிகையின் அருள் ஒளி வெள்ளத்தில் திளைத்திருந்த பட்டர் இன்று பூரணை (பௌர்ணமி) என்றார். துணுக்குற்ற சரபோஜி அரண்மனைக்கேகினார். கிட்ட நின்ற துட்டர் தமது கருத்தை மன்னனிடம் நிரூபித்தமை கண்டு குதூகலித்தனர்.

நிஷ்டையிலிருந்து விடுபட்டவர் மன்னனுக்குத் தவறான திதி சொல்லிவிட்டேனே என்று கவலைப்பட்டார். தான் சொல்லிய திதியை உண்மைப்படுத்த அபிராமி அம்பிகையை வேண்டுதல் செய்து நூறு பதிகம் பாடுவதாகவும் அதற்கு அம்பிகை செவிசாய்க்காது போனால் பூமியில் ஆழமான கிடங்கு தோண்டி அதனுள் விறகுக் கட்டைகளைப் போட்டு நெருப்புமூட்டி அதன் மத்தியில் நூறு நூல் கொண்ட உறிகட்டி அதன்மேல் ஏறியிருந்து

நூறு பாட்டுப் பாடுவதாகவும் ஒரு பாடல் பாடி முடிவில் ஒரு நூல் அறுப்பதெனவும் நூறு பாடல் வரை பாடியும் அம்பிகை அருளவில்லையானால் நூறாவது நூலையும் அறுத்து நெருப்பில் விழுந்து இறத்தலே கடன் என்று துணிந்தார்.

பாடல்கள் யாவும் அந்தாதியாகவே பாடப்பட்டவை. அந்தாதி என்பது முதல் பாடலின் கடைசிச் சொல் இரண்டாவது பாடலின் முதற் சொல்லாக வரும் இலக்கியப் பாடல் வரிசையில் ஒன்றாகும். கம்பர் பாடிய சடகோபரந்தாதி இவ்வகையைச் சேர்ந்ததாகும். பட்டரது பாடல் இங்கு ஆதியந்தம் இல்லாத அபிராமியம்மையின் திருவருளைக் குறித்து நிற்கிறது.

பட்டர்பிரான் 78 செய்யுளும் உறியின் நூல் 78உம் அறுக்கப்பட்டுவிட்டது. துட்டரின் மனம் குதூகலமடைந்தது. "விழிக்கே அருளுண்டு அபிராமி வல்லிக்கு வேதம் சொன்ன..." என்ற 79ஆம் பாடல் பாடியதும் பேரதிசயம் நிகழ்ந்தது. அமாவாசை இருள் அகன்று குளிர்ச்சி தரும் பூரண சந்திரன் எவ்வாறு தோன்றியது. இருளில் மூழ்கியிருந்த துட்டர் எங்கே மறைந்தனர். (இருள் மறைந்தது போல் அவரும் மாயம்) அம்பிகை தனது அடியவனுக்காகத் தனது காதிலிருந்த தோட்டை (தாடங்கம்) எடுத்தெறிந்தபோது அது பூரண நிலவாக ஒளி வீசியது கண்டோர் பரவசமாயினர்.

"அன்பனே மன்னவனுக்கு நீ சொன்ன வார்த்தை தவறாகாதிருக்க அருளினோம்" மேலும் என்மீது மிகுதிப் பாடல்களையும் பாடுக" என்றருளினார்.

இவையெல்லாம் கேள்விப்பட்ட சரபோஜி "தங்களது பெருமையை அறியாது புறக்கணித்த எனது பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்றார். "எல்லாம் அம்பிகை அருள்" என்றார் பட்டர்.

இதுகேட்ட மன்னன் மகிழ்ந்து சில விளை நிலங்களைத் தானமாக வழங்கினார்.

"வல்லமை தாராயோ சிவ சக்தி சுடர்விடும்
எனை இங்கு படைத்து விட்டாய்"

-பாரதியார்-

## வேலவா நீயொரு மாற்றம் தந்திடு

நாட்டு நடப்பு எல்லாம் நாசமே
நாளும் பொழுதும் கொலைக்களம் ஆகுது
காட்டு விலங்காய் மக்கள் நடக்கிறார்
காம இச்சையில் ஓடித் திரிகிறார்

வீட்டில் கூட நிம்மதி இல்லையே
வேலவா நீயொரு மாற்றம் தந்திடு
ஏட்டுச் சுரைக்காய் ஆனது கல்வியே
ஏனோ இந்த அவலம் நேர்ந்தது.

-வ. யோகானந்தசிவம்-

# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ!

(தொடர்ச்சி...

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

முருகன் வள்ளிநாச்சியாரை வதுவை செய்ய விநாயகப் பெருமானை, ஓங்கார மூர்த்தியை அழைக்கிறார். அவனுடைய இந்தப் பெரிய திருவிளையாடலிலே பொதிந்து கிடக்கும் பொருள்தான் என்ன? ஞானாசாரியன் உயிருக்கு அதன் தற்போத முனைப்புக் கெடப் பிரணவ மந்திர உபதேசம் செய்வான் என்ற அரிய பெரிய தத்துவத்தை நமக்குச் சொல்லித் தருகின்றார் முருகப்பெருமான். தற்போதம் அடங்கும்போது, "என்செயலாவது யாதொன்றுமில்லை; இனித் தெய்வமே, உன் செயலே என்று உணரப்பெற்றேன்" என்ற தெளிவு ஏற்படும். தெளிவு வருங்கால் ஜீவன் சிவனை முன்னிட்டுச் சிவனில் அடங்கும்.

துன்னிய ஐம்புல வேடர் சுழலில் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும் தொல் உயிரை
மன்னும் அருட்குருவாகி வந்து அவரின்நீக்கி
மலம் அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்

(சித்தியார்)

ஓங்காரமும், முருகப்பெருமானும், வள்ளிநாயகியாரும் ஒருமையுறும் நிலையைக் கச்சியப்பர் காட்டுகிறார். பாசம் ஒரு பெரிய கடல். அது விரிந்து பரந்து கிடக்கிறது. பாவம், புண்ணியம் என்ற அலைகள் அங்கே அடிக்கின்றன. உயிர் அந்த வினைகளாம் அலைகளினிடையே சிக்கி அலைப்புண்டு தடுமாறித் தத்தளிக்கின்றது. இருவினையாகிய கடலைக் கடந்து, இருவினை ஒப்பாகிய கரையை உயிர் அடைய வேண்டும். அந்தக் கரைதான் பாச நீக்கமாகிய கரை. குரு என்ற தோணிக்காரன் ஏற்றுவானேயானால் இருவினைக் கடலைக் கடந்து இருவினை ஒப்பாகிய கரையை உயிர் அடைய முடியும். பாசம் பேயாகப் பற்றிக்கொண்டு இருக்கும் வரையிலும் இறைவனைப் பற்றி நினைக்கவே முடியாது. நினைத்தாலும் உலகப்பற்று நம்மைத் திசை திருப்பாமல் விடமாட்டாது. உலகப் பற்றிலே தளர்ச்சியுண்டானால், இறைவனைப் பற்றிய எண்ணமும் அவனுடைய திருவடிகளையே பற்றிக்கொள்ள வேண்டும் என்ற முடிவும் வரும். பிறப்புக்கு வித்தாக இருப்பது பற்று. நமக்கு மனைவியிடம் ஒரு பற்று. மக்களிடையே ஒரு பற்று. பணத்திடம் ஒரு பற்று. இம்மூன்றும் பிறவியை உண்டாக்குவன. இன்பமாகிய அநுபூதியை நாம் பெறமுடியாமல் தடைபோட்டு நிற்பன. தளையாக நின்று பிறவிச் சிறையிலே நம்மைத் தள்ளுவன. பாசத்தினால் உண்டான வினைகள் ஒழியும் வரையும் பிறவி இருக்கும்.

வினைகள் இரண்டு. நல்வினை பொன்விலங்கு. தீவினை இரும்பு விலங்கு. இந்த வினைவிலங்கு நீங்கினால் தேகம் எனும் சிறை ஒழியும். மேலும் மேலும் பிறந்து, பிறந்து இறப்பதற்குக் காரணம் இரட்டைவினை. இந்த வினைக்குக் காரணம் பசுபோதம். இறைவனை உணரவிடாது செம்பிலே களிம்புபோல நம்மிடம் இந்தக் கள்ளவினை இருக்கிறது. இது நம்மைவிட்டு நீங்கினால் நமக்கு இன்பம் உண்டாகும். இந்தக் கள்ளவினைப் பசுபோதத்தை ஏற்றுக்கொள்ள ஒருவர் காத்துக்கொண்டிருக்கிறார். அவரிடம் கொடுத்துவிட வேண்டியதுதானே! அவர்தான் நம்முடைய பிள்ளையார் சித்திவேழம். நாம் கொடுக்கும் கள்ளவினைப் பசு

போதத்தைப் பெற்றுக்கொண்டு சித்திவேழம் நமக்கு எல்லாம் தரவல்ல கருணையைப் பொழிகின்றது.

உள்ளமெனும் கூடத்துள் ஊக்க மெனும்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைப் படுத்தித் தறுகட பாசக்
கள்ள வினைப் பசுபோதக் கவளம் இடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழி சித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.

வள்ளிக்கு வழிகாட்ட அண்ணாவை அழைக்கிறார் முருகப்பெருமான். விநாயகர் வருகிறார். இங்கே மாபெரும் தத்துவம் மறைந்து கிடக்கிறது. தற்போத முனைப்புக்கெட பசுபோதம் நீங்க ஞானாசாரியன் உயிருக்குப் பிரணவ மந்திர உபதேசம் செய்தலாகும். பிரணவ மந்திர உபதேசத்தினால் தற்போதம் அடங்கும். திரிகரணங்களின் செயல் அடங்கி, ஐந்துபுலன்களின் நுகர்ச்சியும் ஒடுங்கினால் ஒடுக்கம் என்பர். எல்லா மந்திரங்களுக்கும் மூலமாகவும் முடிபாகவும் இருப்பது பிரணவ மந்திரம். இந்தப் பிரணவ மந்திர உபதேசத்தினால் ஓம் என்பதன் உருவம் மனக்கண்ணில் ஒளிமயமாகத் தோன்றும். அந்த ஓங்கார ஒளிக்குள் இறைவனின் திருவுருவம் தோன்றும். யான், எனது என்ற அகந்தையை நீக்கி ஐம்புலன்களையும் சுட்டறுத்து ஓங்கார ஒளிக்குள்ளே முருகனைக் கண்டால் அதுவே பரமானந்தம். தூங்காத தூக்கம். எல்லாம் இறைவன் செயல்; தன் செயல் அல்ல என்ற தெளிவு ஏற்படும்போது சீவன் சிவத்துள் அடங்கும். பற்றற்று புலன் ஒடுங்கினால் பேரானந்தம் உண்டாகும். அப்போது காண்பான், காட்சி, காட்சிப்பொருள் ஆகிய மூன்றினையும் தாண்டி அப்பாலுக்கப்பாலாய் நிற்கின்ற நிலைவரும். இந்நிலையிலே தூங்காமல் தூங்கிச் சுகம் பெறலாம். முருகனிடத்தே நாம் காதல் கொண்டால் பிள்ளையார் பேருதவி செய்வார்.

வள்ளிநாயகியார் தினைப்புனத்திற்குச் சென்றருளினார். அயல் புனத்தில் காவல் செய்த தோழிவந்து, தலைவிபால் வேறுபாடு கண்டு, தலைவியே நீ எவ்விடஞ் சென்றாய் என வினவ, வள்ளிநாயகியார் நாணமுற்று, வேனிற் பருவத்தினால் வெப்பமுற்று அது தீரும் பொருட்டு சுனையில் நீராடச் சென்றேன் என்றார். அந்த நூதனச் சுனையைக் காட்டுதி யானுங் காண்பன் என நகைத்தாள் தோழி. வள்ளிநாயகியார் தோழியைக் கோபித்து நீ கொடியள் என்றார். தோழியும் தலைவியும் உரையாடல் செய்வதை முழுமுதல்வராகிய தலைவர் கண்டு, இவ்விருவரையும் ஒருசேர அணுகுவதற்கு இதுவே ஏற்ற சமயம் என்று திருவுள்ளங்கொண்டு அவர்களுக்கு அண்மையாகச் சென்றருளினார். நங்கைமீர், யான் தொடுத்த பாணத்தினால் புண்பட்ட மேனியையுடைய ஒரு யானை இவ்விடம் வந்ததுண்டோ என்றார். ஊழி முதல்வராகிய சுப்பிரமணியப் பெருமான் வினவ, பூசித்தற்குரியராகிய இந்தப் பிரபு வேட்டையை மேற்கொண்டு வருதலும், இந்தத் தலைவி தினைப்புனத்தைக் காத்தலைச் செய்வதும் உண்மையேயன்று. இந்த இருவரும் மேற்கொண்ட கோலங்களும், பறவை எய்யும் வேட்டுவர் கோலமே போன்றன. ஒருவர்மேல் ஒருவர்க்கு உரியதாகிய

மையலையும் இவர்கள் விழி உரைத்திடும் எனப் பாங்கி நினைத்து, தான் முன்பிருந்த புனத்தில் சென்றிருந்தாள். அப்போது முருகப்பெருமான் தோழியை நோக்கி, "நீர் விரும்பும் பொருள்யாவும் தருவேன். என்மேற் தவறு கற்பித்து கோபங்கொள்ளாமல் சற்று நீரருள் செய்திடும் என்றார்" வேண்டுதல் வேண்டாமையிலாத ஒப்பற்ற பெருமான்.

தலைவர் கூறியருளிய குறிப்பை உணர்ந்த தோழி, ஐயரே, எம் குலத்துக்கு முன்னில்லாத இஃதோரிழிவினை நிலைநிறுத்துதற்கோ நீவிர் வந்தது. வேடுவர் குலத்துப் பேதையாகிய பெண்ணை உயர்ந்தோர் விரும்புதல் செய்வரோ என்றாள். சீதரன் தரும் அமிர்தினை, வேடுவர்கள் செய்த மாதவம்தனை, பெண்ணிற்கு அரசை, எனக்குக் காதல் நோயைத் தந்து நல்லருள் புரிந்த காரிகையை, பேதை என்று கருதுவதா. அங்ஙனம் கருதுவதே பேதமையாகும் என்றார் பெருமான். தோழியானவள், கொடிய காவலர்கள் வருவார்கள். நாம் உரையாடுவதைக் கண்டால் எமதுயிரை வருத்துவர். ஆதலினால் சென்றருளும் என்று, தலைவியோடு தலைவரைக் கூட்டுதற்கு நெறியொன்று தன்னகத்தே வகுத்துக்கொண்டே கூறினாள்.

தோழியே, தலைவியை என்னோடு சேர்த்து வையாயாயின் காதலியின் உருவெழுதிய கிழியைக் கையிலெடுத்துக்கொண்டு நும் ஊர்த் தெருவில் ஊண், உறக்கமின்றி மடன்மா ஊர்வன். அது பயன் செய்யாவிடில், வரையேறி உயிர் துறப்பன் என அச்சுறுத்தியருளினார். இதனைக் கேட்ட தோழி வடுவருமோ என அஞ்சி தண்ணியபனை மடவாலான ஏறுதல் ஆரியராகிய உமது நீதியாகாது. நீர் இம் குருக்கத்திமரச் செறிவில் மறைந்திரும். உன் காதல் மங்கையைக் கொணர்ந்து நும்மிடந் தருவேன் எனக் கூறி விரைந்து சென்றாள். அச்சமயத்தில் எங்கள் தம்பிரான் அகம் மகிழ்ச்சியாய், அங்கு இனிது ஏகி குருக்கத்திச் சோலையுட்புக்கு மறைந்தருளினார்.

தோழி தினைப்புனம் சென்று வள்ளிநாயகியாரின் பாதங்களை வணங்கி பெருமை பொருந்திய, வேற்பிள்ளையாகிய தலைவரின் காதலையும், ஆற்றாமை, பொறாமை முதலியவற்றை எடுத்துக்கூறி, வள்ளிநாயகியாரை குருக்கத்திச் சோலைக்கு கொண்டு போனாள். இந்நிலையில் இத்தோழியைப் பரிபக்குவ தசையிற் பதியுந்திருவருளாம் என்பர் பெரியோர். தோழி காந்தள் மலர்களைப் பறித்து வருவதாகச் சொல்லி அப்பாற் சென்றாள். உயர்ந்த பற்றாவது ஒப்புயர்வற்ற பற்றற்றான் மேல் வைக்கும் பற்றாகும். வள்ளிநாயகியார் தனித்து நிற்றலும் ஆறுமாமுகன் பெரிதும் மகிழ்ச்சி மிகுந்து முன்னர்போல் காட்சியளித்தருளினார். வள்ளி எம்பிரான் திருவடிகளை வணங்குதலும், அவளை தமது அழகிய கைகளால் எடுத்துத் தழுவி அவ்வம்மையார் பேரின்பமுற தாம் இன்புற்றருளி, உன் தந்தையும் பிறரும் வந்து உன்னைத் தேடுவர். நீ தோழியோடு செல்வாயாக. யாம் நாளை ஆங்கு வருவோம் எனக்கூறி மறைந்தருளினார்.

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளை யோனே கதிர்காமப் பெருமாளே.

(தொடரும்...

# நன்மங்கையரைத் தாய்போற் கருதுவோம்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

தாய்மை உணர்வு மகத்தானது; மனிதாபிமானம் நிறைந்தது. நாம் நடமாடும் பூமியைத் தாயென்கிறோம். பொறுமைக்குப் பூமித்தாய் அகல்வாரைத் தாங்கும். கங்கைத் தாய், காவேரித் தாய் புதுமையானவை. தாய்மை வாத்சல்யத்தோடு இணைந்தது. பெற்ற தாய் எத்தனையோ குழந்தைகட்குத் தாயாய் விடுகிறாள். சகல உயிர் இனங்களும், தாவரமும் தாய்சேய் உறைவுடையன. தாய்மரம், தாய்ப்பசு, தாய்க்கோழி என்பன இயற்கையாகவே வாத்சல்யம் நிறைந்தவை. பாரதி எல்லா மங்கையரையும் தாய் என்பர்.

பெண்டாட்டி தனையடிமைப் படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
கண்டார் க்கு நகைப் பென்னும் உலக வாழ்க்கை
காதலெனும் கதையினுடைக் குழப்பமன்றோ?
உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவளென் றறியீரோ? உணர்ச்சி கெட்டீர்
பண்டாய்ச்சி ஔவை “அன்னையும் பிதாவும்”
பாரிடை முன்னறி தெய்வம் என்றாள் அன்றோ.

தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வமுண்டோ?
தாய் பெண்ணே தமக்கை தங்கை யல்லவோ
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?
மனைவி யொருத் தியையடிமைப் படுத்த வேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ
தாயைப் போலபிள்ளை” என்று முன்னோர்
வாக்குள தன்றோ? பெண்மை அடிமை யுற்றால்
மக்களெல்லாம் அடிமையுறல்வியம் பொன்றாமோ

பாரதி பாடல் சுயசரிதை 46-47

இந்தத் தாயின் மகத்துவத்தையும் நிலையாமையையும் உன்னிச் சமணமுனிவர்கள் இப்படிப் பாடுகின்றார்கள்.

எனக்குத் தாய் ஆகினாள் என்னை ஈங்கிட்டுத்
தனக்குத் தாய் நாடியே சென்றாள் - தனக்குத்தாய்
ஆகியவளும் அதுவானால் தாய்க்குத் தாய்க்கொண்டு
ஏகும் அளித்திவ் வுலகு.

நாலடியார்.

என்னைப் பெற்றெடுத்த அன்னையானவள், என்னை இவ்வுலகில்விட்டு தனக்கு ஒரு தாயை நாடிச் சென்றாள். அவள் தாயாய் இருந்தவளும் அவ்வாறே தனக்குத்தியைக் கருதிச் சென்றாள். அவ்வாறானால் தாயைத் தாவித் தாவி தேடிச் சென்றாள். இவ்வுலகத்தின் இயற்கையை எண்ணிப் பார்த்தால் இரங்கத்தக்கதே. பெண் ஆணென்ற அமைப்பின்

இணைவிழைச்சால் இவ்வுலகம் நடைபெறுகிறது. இந்த ஆண் பெண் இரண்டினுக்கும் கற்பு முக்கியம். இதை நிறையென்று கூறுவர். பெண்ணென்று மட்டுமன்றி ஆணென்று வந்து விட்டால் கற்பு இருவருக்கும் இன்றியமையாததே. நிறையெனின் நெஞ்சைக் கற்புநெறியில் வைத்திருத்தல் எனப் பரிமேழலகர் பொருள் கண்டுள்ளார். பெண்குலம் மாத்திரம் கற்புப்பேண வேண்டும் என்றில்லை. ஆண்களும் அவ்வழியில் வாழ்தலின் இன்றியமையாமையைக் காந்தியடிகள் வற்புறுத்தினார் இல்லறமும் பிரமச்சரியமும் என்ற நூலிலே. ஆளுந்தன்மையே ஆண்மை. வாழுந்தன்மையினர் வாழ்நர். "அ்துவாணர் என்று மருவிற்று. அறிவு நிறை ஓர்ப்பு, கடைப்பிடி (உறுதி) ஆண்மைக்குரிய குணங்கள். பெண்களுக்கு மடம், அச்சம், நாணம், பயிர்ப்பு நற்குணங்கள்.

அறிவு - ஞான உணர்வு
ஓர்ப்பு - தெளிவு
நிறை - திண்மை- நீதி
கடைப்பிடி- கருமத்தை முடிக்கும் உறுதி சாதனை.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் நிறை பொதுமையானது. புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரமாம் என்பது ஔவை வாக்கு. திட சித்தம் மனிதாய நலத்தின் மாண்பு எனலாம். என்னைத் தீண்டாதே என மனைவியார் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மனைவி சொன்னதால் எந்தப் பெண்ணையுமவர் தீண்டவே இல்லை. புலனைந்தையும் வென்றார் கோவேளர். நீலகண்டர் பெண் வெறும் போகப்பொருளன்று, காமப் பெட்டகமும் அல்ல அவள். பெட்டிடையவள் பெண். திட்பம் உடையவள் பெண். விரசங்கட்கு அவள் இடமளிக்கக் கூடாது. எனவே பெண்ணினத்தைப் பெற்ற தாயாக மதிப்போம் எனப் பட்டினத்தார் பாடி வைத்திருக்கிறார். காமக்கணிச்சி உடைக்கும் நாணுத்தாள் வீழ்த்த கதவு என்கிறது வள்ளுவம். பட்டினத்தாரின் பௌத்திரமான திருவாக்கு வருமாறு.

பேய்போற் றிரிந்து பிணம் போற்கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோலுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போல் அனைவர்க்குத் தாழ்மை சொல்லிச்
சேய்போல் இருப்பர்கண் டீருண்மை ஞானந் தெளிந்தவரே

பட்டினத்தார் பாடல் 77

இதன் பொருள் வருமாறு:

திருவடி ஞானம் கைவரப் பெற்றவர்கள் பிசாசுபோல் அலைந்து, செத்தபிணம் போலச் செயலற்றிருந்து பிறர் இட்ட பிச்சை எல்லாவற்றையும் நாய்போல உண்டு, நரிபோல அங்கும் இங்கும் திரிந்து, கற்புடைய பெண்களைத் தாய்போல் எண்ணி- எல்லார்க்கும் பந்துக்களைப் போலத் தாழ்மையான வார்த்தைகளைப் போதித்து, குழந்தைபோல் இருப்பார்கள். (உண்மை ஞானந் தெளிந்தவர்கள்) ஒருவனுக்கு ஒருத்தியென்ற நியதியைக் கடைப்பிடிப்பது மனிதத்தின் விழுப்பம் ஆகும்.

கற்புறு சிந்தை மாதர்
கணவரை அன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார்
யாங்களும் இன்ப வாழ்வும்

தன்பொறி ஆக நல்கும்
தலைவநின் அலது, ஓர் தெய்வம்
பொற்பு உறக் கருதோம் கண்டாய்
பூரணா னந்த வாழ்வே

தாயுமானவர்- 36 கற்புருசிந்தை 1

தன்பொறி ஆக- தன் செல்வமாக, பொற்பு உற பொலிவு அடைதற் பொருட்டு. இப்பாடலிற் பெண்ணின் பெட்பைப் பேசிப் பிறதெய்வ வணக்கத்தையும் நிராகரித்திருக் கிறார் தாயுமான சுவாமிகள்.

இன்று வன்முறைக் கலாசாரமொன்று வந்து பெண்ணினத்தாரை,. வலுவில் வல்லுறவு வைக்கும் அநாகரிகத்துள் ஆழ்த்தியுள்ளமை வெட்கக் கேடாகும். இந்த வன்முறைக் கலாசாரத்தின் மூலகாரணியைக் கண்டு கழுவாய் தேடவேண்டுமன்றோ.

மகாகவி பிற பெண்களை நயவாத பேராண்மையை திக்குத் தெரியாத காட்டிலென்ற பாடலிலே எடுத்தோதிக் காம வெறியர்களைக் கண்டித்துள்ளார்.

அண்ணா உனதடியில் வீழ்வேன் - எனை
அஞ்சக் கொடுமை சொல்ல வேண்டா - பிறன்
கண்ணாலஞ் செய்து விட்ட பெண்ணை - உன்றன்
கண்ணாற் பார்த்திடவுந் தகுமோ?

ஏடி சாத்திரங்கள் வேண்டேன் - நின
தின்பம் வேண்டுமடி, கனியே - நின்றன்
மோடி கிறுக்குதடி தலையை - நல்ல
மொந்தைப் பழைய கள்ளைப் போலவே.

12 கண்ணன் என் காதலன் 12-3

எனவே பிறமனை நயவாப் பேராண்மையைப் பேணுவோம்.

## கருதி வந்து துயர் துலைப்பாய் முருகா

அளப்பெரிய சக்தி உண்டு செல்வச்சந்நிதி ஆலயத்தில்
அறிந்தவர்கள் அறிவாலுணர்ந்து வருவார் இத்தலத்தில்
களப்பலியாப் போகும் நிலைவந்து சேர்ந்தபோதும் உன்னிடத்தில் முறையிட்டால்
கருதி வந்து துயர் துலைப்பாய் முருகா அவர் மனத்தில்
பிரிவென்று உனை விட்டகலாநிலை வேண்டும் என்மனத்தில்
பிரிவென்று வர விடாது காப்பாய் முருகா உன் தலத்தில்
விரிந்து நல்லறிவு பெற வேண்டும் முருகா என் மனத்தில்
வேலாகி தினம்நின்று காக்கின்றாய் சந்நிதி தலத்தில் முருகா சந்நிதி தலத்தில்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 19. தனிப்பெரும் ரமணன்

மணவாசி ராமசாமி ஐயருடைய புத்திரி ரமணி அம்மாளும், அவருடைய சகோதரனும் சகோதரிகளும் குழந்தைப் பருவத்திலிருந்தே பகவானிடம் ஆழ்ந்த பற்றுதலும் ஈடுபாடும் உடையவர்கள். ராமசாமி ஐயர் இளம் வயதிலேயே பகவானின் "வலை"யில் சிக்கியவர். வயதான காலத்திலும் அவருக்கு பகவானின் பெயர் கேட்டவுடனேயே பக்தியினால் கண்களில் நீர் பெருகும். இவர் எழுதிய அனேக ரமண பக்திப் பாடல் களில் ஒன்றான "சரணாகதி"அடியார்களிடையே பிரசித்தி பெற்று, அது அவர் பெயரின் அடைமொழி ஆகிவிட்டது. "சரணாகதி ராமசாமி ஐயர்" என்றால்த்தான் அனேகருக்குப் புரியும். அன்பான தகப்பனாரென்றாலும் அவர் மிக முன்கோபி. ரமணியம்மாள் சொன்னார்.



நாங்களெல்லாம் குழந்தைகளாயிருந்த காலமது. ஏதாவது விஷமம் செய்து கொண்டிருப்போம். ஒரு சமயம் எதற்காகவோ, அம்மா எங்களைக் கோபித்துக் கொண்டிருந்த நேரத்தில், அப்பா வந்து கொண்டிருப்பதைப் பார்த்த பகவான், ரகசியக் குரலில் "உஷ், உஷ் அப்பா வருகிறார், அப்பா வருகிறார்!" என்று சொல்லி எச்சரிக்கவே கிடைத்திருக்க வேண்டிய தண்டனையிலிருந்து நாங்கள் தப்பினோம்.

ஒரு சமயம் அக்கா ராஜம்மா தலைபின்னி 'S' கட்டு கட்டி (இருக்கிப் பின்னிய ஜடையை S வடிவத்தில் கொண்டை போடுவார்கள், அழகு செய்வதாக எண்ணி) அக் கொண்டைமேல் தங்க "மல்லிகைப்பூ" (பிறை வடிவில் மல்லிகை மொட்டுக்களைக் கட்டினாற்போல் பொன்னில் செய்த நகை) அணிந்து கொண்டு, பகவானிடம் காண்பிக்க விருபாக்ஷ குகைக்குச் சென்றாள். பகவான் அந்த நகையைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "இது மல்லிகையா? வாசனை எங்கே? மல்லிகை இதழ்கள் கையைக் குத்துமா என்ன? என்று நகையுடன் விளையாடியது. (சிலேடை அகஸ்மாத்தானது). குழந்தைகளோடு குழந்தையாக ஞானச்சிசு விளையாடியது கண்கொள்ளாக் காட்சி!

"ராஜம்மாளுக்குப் பயமே கிடையாது. எந்த சமயத்திலும் விருபாக்ஷ குகைக்கு ஓடிப்போய் விடுவாள். பகவான் கூட, வழியிலுள்ள கல்லறைகளையெல்லாம் தாண்டிப், பயமின்றித் தனியே வந்து விடுவாள் என்று சொல்லியதாம்.

அக்கா ராஜம்மா கல்யாணமாகி, குழந்தைகளுக்குத் தாயான பின்னரும், பகவானுடன் சலுகையுடன் பேசுவாள். அவளுடைய பெண் ஹம்சாவுக்கு பயந்த சுபாவம். என் தங்கை உத்தமி ஆஸ்பத்திரியில் பிரசவித்திருந்தாள். ராஜக்கா அவளைப் பார்க்க ஹம்சாவுடன் ஆஸ்பத்திரிக்குப் போனாள். அங்கிருந்த சூழ்நிலையைப் பார்த்த சிறுமி ஹம்சா அருவருப்பும் பீதியுமடைந்தாள். இதை ராஜம்மா பகவானிடம் சொன்னதும் அது, இதோபார்! ஆஸ்பத்திரி

எவ்வளவு பேருக்கு வலியிலிருந்தும் நோயிலிருந்தும் நிவாரணம் அளிக்கிறது! அதை நீ புனிதமான ஆலயம் போலல்லவா நினைக்க வேண்டும். அருவருப்புக் கொள்ளலாமா? என்று அறிவுரை கூறியது. வேறொரு சமயம் தெருவில் போன பிரேத ஊர்வலத்தைக் கண்டு அரண்டுபோயிருந்த சிறுமி ஹம்சாவை பகவானிடம் அழைத்து வந்து ராஜம்மா, 'இவள் இப்படி பயப்படுகிறாளே, என்ன செய்வது? என்று முறையிட்டுச் சொல்லவும், பகவான் ஹம்சாவிடம் செத்த பிணத்தைப் பார்த்து யாராவது பயப்படுவார்களா? அது பொம்மை மாதிரி ஜடம். ஒன்றும் செய்ய முடியாது, உயிருள்ள பிணத்தைப் பார்த்து பயந்தாலாவது அர்த்தமிருக்கிறது' என்று தைரியமளித்தது. அந்தச் சமயம் அதன் அர்த்தம் அவளுக்குச் சரியாகப் புரியாவிட்டாலும், பிற்காலத்தில் அதை நினைத்து மனம் வலுவுற்று, மெள்ள பயம் நீங்கியதாக ஹம்சா சொல்லுவாள்."

* * * * * *

குஞ்சுஸ்வாமி சொன்னார். "பகவான் காலை நான்கு மணிக்கு சமையலறையில் காய் நறுக்கும். நாங்களும் யாராவது ஒன்றிரண்டு பேர் உதவுவோம். சில சமயம் காய்களின் அளவு மிக அதிகமாகி எங்களுக்கு மலைப்பாக இருக்கும். பகவான் எல்லோரையும் விட மிக வேகமாகவும், அதிக அளவிலும் காய்களை நறுக்கிவிடும்."

இந்தச் சமயங்களில் சீக்கிரம் வேலையை முடித்துவிட்டு ஒரு குட்டித் தூக்கம் போடும் நப்பாசையில் மெல்ல கடிகாரத்தைப் பார்ப்போம். அதை ஏன் பார்க்கிறீர்கள் என்று பகவான் கேட்டால் "ஐந்து மணிக்குள் வேலையை முடித்தால் ஒரு மணிநேரம் தியானம் செய்யலாமென்று நினைத்தோம்" என்று பகவானை லேசாக ஏமாற்றப் பார்த்தால் அது எப்படி முடியும்? அதுதான் உள்ளிருக்கும் சாக்ஷியாயிற்றே. "செய்யும் வேலையை குறித்த நேரத்தில் செய்யவேண்டும். மற்ற எண்ணங்கள்தான் தடங்கல்கள். வேலையின் அளவல்ல சமயத்தில் வேலையை முடிப்பதே தியானம்தான்" என்று மென்மையாக ஆனால் உறுதியாகச் சொல்லி எங்கள் அற்ப உறக்க ஆசையை முளையில் கிள்ளிவிடும் அந்தக் கள்ள பட்டர்".

* * * * * *

கனகம்மாவும் மனதை நெகிழ்விக்கும் சில சம்பவங்களை ஒருநாள் விவரித்துச் சொன்னார்: ஒருமுறை கிருஸ்ணபிரேமி என்பவர் ஆச்ரமத்தில் தங்கியிருந்தார். கிருஸ்ண, ராதையின் சிறு விக்கிரகங்களடங்கிய கண்ணாடிப் பேழையைத் தன் தோள்பையில் வைத்து எப்போதும் சுமந்து கொண்டிருப்பார். படுக்கப்போகும் சமயத்தில் மாத்திரம் அதை இறக்கி வைப்பது அவர் வழக்கம். அவர் முதன்முதல் பகவானைத் தரிசித்தபின், அது தங்கியிருந்த புனித இடங்களையெல்லாம் பார்க்க விழைந்தார். வழிகாட்டுவதற்காக விசுவநாத சுவாமி நியமிக்கப்பட்டார். எல்லா இடங்களையும் பார்த்துவிட்டு கந்தாச்ரமத்தையடைந்தனர். அங்கு நிலவிய சாந்தியில் மூழ்கி, கிருஸ்ணபிரேமி தியானம் புரிய ஆரம்பித்து, அதில் ஆழ்ந்துவிட்டார். வெகு நேரமாகியும் அவர் எழுந்திருக்காததைப் பார்த்த உலகறிவு மிகுந்த விசுவநாத சுவாமி அவரது காதருகில் "கிருஷ்ணன் இந்தக் கோகுலத்தை விட்டுப் பிருந்தாவனம் போய்விட்டார். நாமும் போவோம் வாருங்கள்" என்று சொல்ல, அவர் பேசாமல் எழுந்து பின் தொடர்ந்தார். ஆச்ரமம் வந்ததும் விசுவநாத சுவாமி பகவானிடம் தாங்கள் பார்த்த இடங்களெல்லாவற்றையும் விவரித்துவிட்டு, கிருஷ்ணப் பிரேமியை தியானத்திலிருந்து எழுப்பத்

தான் உபயோகித்த யுக்தியைத் தெரிவிக்க, பகவான் புன்முறுவலுடன் 'பலே, பலே, ரொம்பப் பொருத்தமாயிருக்கிறதே, பிருந்தாவனம்' என்றது.

'காண்பனவெல்லாம் வாசுதேவ'னென்ற திடமான கொள்கையுடைய தீவிர வைஷ்ணவரான கிருஷ்ணபிரேமி, பகவானிடம் 'சர்வம் வாசுதேவ மயம் ஜகத்' என்பது மற்றெல்லாவற்றையும் விட மிக உயர்ந்த தத்துவமல்லவா? என்று கேட்டார்.

சம்மதத்திற்கு அடையாளமாக தலையசைத்த பகவான் "ஆமாம், அது மிக உயர்ந்த உணர்வு. ஆனால் 'சர்வம் வாசுதேவமயம் ஜகத்' என்றால் காணப்படும் ஜகமெல்லாம் வாசுதேவன் மயம்' என்று எண்ணுவது யார்? நீயே அல்லவா அந்தக் காணப்படும் பொருள். எதுவாவது முன் வந்து 'நான் வாசுதேவன்' என்று அறிவித்துக் கொள்கிறதா? பூமியையும் மரங்களையும், செடிகளையும் வாசுதேவனாகக் காணும்போது, உன்னையே அவனாகக் காண விரும்பவில்லையா? எல்லாவற்றையும் வாசுதேவனாகப் பார்க்கும் நீ, உன்னையும் அவனாகக் காணக் கற்றுக்கொண்டால், நீயே வாசுதேவனாகி விடுவாய். அதன்பின் ஒவ்வொன்றையும் வாசுதேவனாகக் காணும் அவசியமிருக்காது. காண்பவன் வாசுதேவனாக மாறிவிட்டால், காண்பவையெல்லாம் அவனாகி விடுமல்லவா? ஆதிசங்கரரின் 'திருஷ்டிம் ஞானமயம் கிருத்வா', என்பதும் இதையேதான்" என்றார் பரிவுடன்.

(தொடரும்...

## பாபாவின் அருளுரையிலிருந்து...

* உன் குற்றம் குறைகளைக் கண்டுபிடி, அடுத்தவரிடம் குணங்களைத் தேடு. அடுத்தவரிடமுள்ள குறைகளைத் தேடுவது பாவம். மிருக உணர்ச்சிகளைக் களைந்து விட்டால், தெய்வீக உணர்வுகள் பெருக்கெடுக்கும்.

* நீ வெளிச்சத்தில் இருக்கிறாய். ஒளி உன்னிடம் இருக்கிறது. நீயே ஒளியாகிறாய். உன் சொல், செயல், சிந்தனை, குணம், மனம் ஆகியவற்றை கவனி.

* நீ நம்பிக்கையை வளர்த்துக்கொள். அப்போதுதான் பிரச்சினைகள் வெள்ளம்போல வந்து தாக்கும்போது, பாறைபோல எதிர்த்துநிற்க இயலும். வெளியுலக வாழ்வின் மாறும் சூழ்நிலைகளை அந்த நம்பிக்கை மறக்க வைக்கும்.

* ஞானக் கதவுகள் திறக்கட்டும். அறியாமைத்திரை கிழிபடட்டும். தெய்வீக பேரானந்தம் வீட்டுக்குள் செல்லட்டும். நிலையான நிம்மதியில் நீ இருப்பாய். தன்னலமற்ற தொண்டு என்னை மகிழச் செய்கிறது. அனைத்து ஒழுக்கங்களுக்கும் அடிப்படை தூய்மையான மனம்தான்.

* மிக விரும்பக்கூடிய செல்வம் இறையருளே. கண்ணை இமை காப்பதுபோல் அவன் உங்களைக் காப்பாற்றுவான். இதில் சந்தேகம் வேண்டாம். நல்லதையே கேள்; நல்லதையே காண்; நன்றே செய்; நலமே எண்ணு; அப்போது தீயவை களையப்படும். இறையருள் உனக்கு இனிதே கிடைக்கும்.

# வகுத்தான் வகுத்தவகை

– திரு ஆ. இராசரத்தினம் அவர்கள் –

சிவம் என்ற ஒரு இளைஞன் யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள காங்கேசன்துறைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒரு சிறு கிராமத்தில் குறிப்பிட்ட நெடுஞ்சாலையோரமாகப் பலசரக்குக் கடையொன்றை நடாத்தி வந்தான். திருமணமாகாததாலும் கடையின் பாதுகாப்புக் கருதியும் இரவில் கடையில் தங்குவான். காலையில் எழுந்து "செல்வற்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்பதுபோல பல திசையும் விழுதுகள் விட்டு அண்மையில் வளர்ந்திருந்த ஆலமர விழுதில் ஒன்றைப் பிடுங்கி அதைக் கொண்டு பல் துலக்குவது வழக்கம்.

சில சமயத்தில் கால்நடையாக அவ்வழியாக மருதனார்மடம் வரை சென்று வரும் ஒரு சாதுவுக்கும் தான் வெட்டி வைத்திருக்கும் ஆலம் விழுதுத் துண்டை அன்புடன் கொடுப்பார். இராமபிரானுக்குத் தேன் முதலியவற்றை நல்கிய குகன்போல சாது அதைப் பெற்றுக்கொள்ள இவரும் பெருமகிழ்ச்சி அடைவார். சாதுவும் புன்முறுவலுடன் இவரை ஆசீர்வதிப்பார்.

சாதுவின் கிருபையால் இவரும் சிறந்த ஒரு வியாபாரியாகி விவாகம் செய்து வியாபாரத்தையும் விருத்திசெய்து பின்னர் சீதனக்காணியில் புது மனை ஒன்றையும் கட்டி முடித்தார். குடிபுக ஏற்பாடு செய்து மருதனார்மடத்தில் உள்ள சந்தையில் காய்கறிகள் வாங்கச் சென்றார். சில நாட்களில் சாதுவும் மருதனார்மட சந்தைவரை நடையில் வந்து தனது அன்பர்களுடன் கதைப்பார். இன்றும் அப்படித்தான் வந்தவிடத்து சந்தையில் நின்ற சிவத்தைக் கண்டு உரையாடியபோது மறுநாள் குடிபுகுதலுக்காகக் காய்கறி வாங்கத்தான் சிவம் வந்ததை சாது அறிந்து கொண்டார்.

என்ன அதிசயம்! மறுநாள் சிவத்தின் புதுமனை புகுவிழாவில் சாதுவும் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கவும் செய்தார்.

சாதுவின் (சுவாமியின்) கிருபையால் சிவம் யாழ்ப்பாணம் பெரியகடையில் ஒரு வியாபாரம் தொடங்கிப் பின் பல இறக்குமதிப் பொருட்களை விநியோகம் செய்யும் உரிமமும் பெற்றார். அதனால் அவர் ஒரு பெரிய வியாபாரியாகிப் பணக்காரனுமானார்.

சனி, ஞாயிறு நாட்களில் ஊரில் கல்விமான்களால் நடாத்தப்படும் ஆன்மீக வகுப்புக்களில் கலந்து திருக்குறள், பெரியபுராணம், பகவத்கீதை முதலிய நூல்களைக் கற்று ஆன்மீக வழியில் வாழ்ந்து வந்தார்.

"விதி காணும் உடம்பு" என்றும் "உடன்பிறந்தே கொல்லும் வியாதி" என்பதாலும் நோய் எமது சொத்தாகிறது.

பொதுவாகப் பணக்காரர்களுக்கு வரும் நோயான சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம் இவரையும் விட்டுவைக்கவில்லை. காலாகாலமாக மருத்துவரிடம் காட்டி மருந்து எடுத்துப்

பாவிப்பார். ஒருநாள் நோய் அதிகரிக்க தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் சேர்க்கப்பட்டார். ஒருவாரம் தங்கவேண்டுமென்ற டாக்டரின் ஆலோசனைப்படி இவரும் தங்கினார். நேரத்துக்கு ஊசி போடவேண்டும் என்று டாக்டர் கூறியிருந்தார். அறுசுவைகளோடு உணவு அருந்தியவருக்கு கும்பலில் கோவிந்தா என ஆஸ்பத்திரியில் சமைக்கும் உணவு உவக்காதுதானே. அதனால் வீட்டிலிருந்து உணவு கொண்டு வருவதற்கு அனுமதி கொடுத்தார்கள். ஆனால் ஊசிபோடமுன் உணவு கொடுக்கப்படவேண்டும் என்பது நிபந்தனை.

வீட்டில் சமையலுக்கு ஆட்களும் வண்டி ஓட்ட சாரதி ஒருவரும் இருப்பதால் பிரச்சனை ஏதும் இன்றி உணவு நேரத்துக்கு வந்துகொண்டிருந்தது. ஆனால் ஒருநாள் உணவு வரப் பிந்திவிட்டது. உணவு வீட்டிலிருந்து அனுப்பியாயிற்று என்று கூறினார்கள். ஆனால் உணவு வரவில்லை.

நேரம் கழிந்துவிட்டதால் ஊசிபோடமுன் ஆஸ்பத்திரி உணவையே சாப்பிட வேண்டியதாயிற்று. ஊசிபோடுவதற்கு நர்ஸ் தயாராகினார். கார்ச்சாரதி வடிவேலு சாப்பாட்டைக் கொண்டுவந்து ஆஸ்பத்திரியில் சிவம் தங்கியிருக்கும் அறைக் கதவைத் திறந்ததும் நர்ஸ் ஊசிபோட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு திகைத்தான். பதறினான். சாப்பாட்டை நேரத்துக்குக் கொண்டுவராமைக்கு வழியில் ஏற்பட்ட விபத்துத்தான் - அதாவது வழியில் ஏற்பட்ட பெரிய விபத்து ஒன்றுதான் காரணம்- என்று கூறக்கூடிய துணிவு இல்லாமையில் வாய் திறக்கவும் முடியாமல் தவிப்பதையும் கண்ட சிவம் அவனை அமைதியாக இருக்கும்படியும் இங்கு எல்லாம் சரியாகவே நடக்கின்றது என்றும் கூறியதைக் கேட்டு வடிவேலு அமைதி அடைந்தான்.

மேலும் சிவம், “வடிவேலு! ஒருவருக்கு எந்தநேரம் எப்படியான உணவு கிடைக்க வேண்டும் என்று வகுத்தான் (தெய்வம்) வகுத்தபடியே நடக்கும். இது முற்றும் உண்மை. அதன்படியேதான் இன்று நான் ஆஸ்பத்திரி உணவுதான் சாப்பிடவேண்டும் என்று தெய்வத்தால் முன்பே வகுக்கப்பட்டுள்ளது. ஆகவே இது யாருடைய பிழையும் இல்லை” என்றார்.

இதனையே திருவள்ளுவரும் பல ஆண்டுகளுக்கு முன்பு பின்வருமாறு கூறியுள்ளார்.

“வகுத்தான் வகுத்த வகை அல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது”

“ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பொருட்கள் கோடியை முயன்று கொடுத்தார்க்கும் வகுத்தான் (தெய்வம்) வகுத்தவகையான் அல்லாது நுகர்தல் உண்டாகாது” என்பது அதன் கருத்தாம்.

“இதை நான் முன்னர் கற்றுள்ளேன். ஆனால் அனுபவரீதியாக இன்றுதான் இதன் உண்மையை அறிந்துள்ளேன். அதுவும் அவன் விருப்பந்தான்” என்றும் கூறினார் சிவம்.

துன்பத்திலும் இன்பத்திலும் தெய்வம் வகுத்ததென்று சிந்தித்தால் எவ்வித துன்பமும் இல்லை. இதை நாமும் நன்கு சிந்திப்பது நன்று.

வறியவனுக்கும் வகுத்தான் வகுக்கில் அறுசுவை ஊண் நுகரல் உடைத்து என்பதும் மறைமுகமாக விளக்குகின்றது.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

| | | | |
|---|---|---|---|
| சி. மணிதரன், செ. அபிராமி | | கொடிகாமம் | 2000. 00 |
| M. மணிவண்ணன் | | கொழும்பு | 1மூடை அரிசி |
| ஓர் அன்பர் | | சாவகச்சேரி | 8000. 00 |
| திரு செந்தில் | | கலட்டி | 10000. 00 |
| R. சந்திராதேவி | | மட்டக்களப்பு | 1000. 00 |
| ஓர் அன்பர் | | மட்டக்களப்பு | 2000. 00 |
| நாதன் பிறதேர்ஸ் | | இணுவில் | 1மூடை அரிசி |
| போட்டோ ஶ்ரீ | k.k.s றோட் | கோண்டாவில் | 1000. 00 |
| கு. தியாகராஜசர்மா | | நீர்வேலி | 1மூடை அரிசி 2000. 00 |
| க. முரளிதரன் | | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| ப. பிரதீஸ்வரன் | | அச்சுவேலி | 5000. 00 |
| K. சோமசேகரம்பிள்ளை | | தும்பளை | 4000. 00 |
| நா. கந்தப்பு | | அச்சுவேலி | 2000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் | | மல்லாகம் | 5000. 00 |
| தி. சங்கர்குமார் | | கொக்குவில் | 25000. 00 |
| பொ. குகநாதன் | | கொக்குவில் | 15000. 00 |
| கிட்டிணன் ஜெயக்குமார் | | நீர்வேலி | 500. 00 |
| கனகலிங்கம் சந்திரவாசன் | | நீர்வேலி | 500. 00 |
| தி. ஜெயராமன் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பொ. குகனேஸ்வரன் | | கொக்குவில் | 5000. 00 |
| அ. பரமேஸ்வரன் | | கொழும்பு | 2000. 00 |
| செ. கந்தசாமி (வங்கியாளர்) | | சண்டிலிப்பாய் | 1000. 00 |
| நா. தில்லைநாதன் | | இணுவில் (நாவலப்பிட்டி) | 1000. 00 |
| ஜெ. மயூரன் | | கொய்யாத்தோட்டம் | 1000. 00 |
| திருமதி S. செல்வரெட்ணம் | | கொழும்பு-6 | 5000. 00 |
| மாணிக்கராசா சறோஜினிதேவி | | பருத்தித்துறை | 2500. 00 |
| கோப்பாய் சிவம் | | கோப்பாய் | 2000. 00 |
| A. துரைச்சாமி ஐயர் | | மல்லாகம் | 2000. 00 |
| கா. அருளானந்தம் | | சங்கானை | 2000. 00 |
| கர்ணானந்தராஜா சிவமலர் | | கரணவாய் மேற்கு | 5000. 00 |
| இ. ஶ்ரீஸ்கந்தராம் | | உரும்பராய் | 1000. 00 |
| ஆ. தெய்வேந்திரம் | | அச்சுவேலி | 3000. 00 |
| சா. கோகுலதாசன் குடும்பம் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |

| | | |
|---|---|---|
| க. சுதாகரன் குடும்பம் | சங்கானை (அவுஸ்திரேலியா) | 5000. 00 |
| நா. ஹரீந்திரக்குருக்கள் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| யோ. சக்திவேல் | மூளாய் | 5000. 00 |
| த. சிவசுதன் குடும்பம் | இடைக்காடு | 2000. 00 |
| த. கேதீஸ்வரன் குடும்பம் | பிரான்ஸ் | 1000. 00 |
| K. சிவசுப்பிரமணியம் | கொழும்பு-4 | 1000. 00 |
| சு. தில்லைச்சிவலோகநாதன் | புத்தூர்மேற்கு | 1500. 00 |
| ஜெ. தவேதன் | சங்கானை | 5000. 00 |
| திருமதி S. நடராஜா | நவிண்டில் | 1000. 00 |
| சற்குணச்செல்வம் அபிராம், சற்குணச்செல்வம் அர்ஜுன் | நெதர்லண்ட் | 10000. 00 |
| கோ. கீர்த்திக் | மட்டக்களப்பு | 500. 00 |
| சூ. சாமந்தி | வரணி | 1000. 00 |
| சீ. கமலதாஸ் | நீர்வேலி | 5000. 00 |
| K. றொசாங்கன் | திருநெல்வேலி | 1000. 00 |
| மனோன்மணி நினைவாக செ. சிவலிங்கம் மூலம் | இணுவில் | 4புட்டி அரிசி |
| கமலா குணசிங்கம் | சாவகச்சேரி | 1000. 00 |
| கீதாம்பரம் சரஸ்வதிமூலம் சண்முகம் முத்துப்பிள்ளை | | |
| கந்தையா இராசம்மா நினைவாக | கல்வியங்காடு | 3000. 00 |
| அ. தவராசா | அராலிமேற்கு, வட்டுக்கோட்டை | 2000. 00 |
| த. நடேசன் | உரும்பராய் | 1500. 00 |
| இ. ரவீந்திரன் | கொழும்பு | 500. 00 |
| K.V. குகேந்திரன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| திவாகர் சுவர்ணா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| திருமதி சேனாதிராசா | யாழ்ப்பாணம் | 1020. 00 |
| ந. ஜெகநாதன் குடும்பம் | கனடா | 1000. 00 |
| தாட்சாயினி கணதீபன் | தெகிவளை | 5000. 00 |
| கைலாசநாதன் விமலேந்திரன் | டென்மார்க் | 5000. 00 |
| வ. ஆறுமுகம் (இளை. அதிபர்) | ஆவரங்கால் | 3000. 00 |
| சு. இராஜகோபால் | ஊரெழு | 20000. 00 |
| K. அஸ்விகன் | மீசாலை | 500. 00 |
| பிரபு பாலச்சந்திரன் | சுன்னாகம் | 1000. 00 |
| யமுனா வர்ணன், திருமதி கமலா குணரட்ணம்மூலம் | பிரான்ஸ் | 10000. 00 |
| செ. சிவஞானம் | அச்சுவேலி | 1000. 00 |
| த. சிவகுமார் | மானிப்பாய் | 1000. 00 |
| வி. சசிகலா | கனடா | 2000. 00 |
| ஐ. பாலேந்திரா | தொண்டைமானாறு | 2000. 00 |

(தொடரும்...

# சான்றோர்க்கு அழகு

**- திரு நா. நல்லதம்பி அவர்கள் -**

பாண்டியன் நெடுஞ்செழியனுடைய தேவியின் காற்சிலம்பு, பொன்செய் கொல்லன் ஒருவனால் திருடப்பட்டது. அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து சென்று, மதுரையில் கண்ணகியின் காற்சிலம்பை விலைகூறி, வீதிவழியே சென்ற கோவலன்தான் அத்தேவியின் காற்சிலம்பைத் திருடினான் எனக் குற்றஞ்சாட்டப்பட்டான்.

இதனைத் தீர விசாரிக்காமலே, கோவலனைக் கொலை செய்வித்தான் பாண்டிய மன்னன். இதனால் பொங்கி எழுந்த கற்பின்கனலி கண்ணகி, ஒற்றைச் சிலம்போடு பாண்டியன் முன் தோன்றினாள் வழக்காடுவதற்கு!

கையிற் சிலம்போடு கண்ணகியைக் கண்டளவே பாண்டியன் தோற்றுப் போனான்; அவள் கூறிய சொல் காதில் ஏறியதும் அவனது உயிர் பிரிந்துவிட்டது!

"இதுவரை காலமும் பேணப்பெற்று வந்த செங்கோல் முறைமை என்னோடு பிழைத்து விட்டதே; யானோ அரசன், யானே கள்வன்" இவைதான் அவனது கடைசி வார்த்தைகள்!

பாண்டிய மன்னன் இவ்விதமாக உயிர்நீத்த செய்தி கேட்டு, அந்தப்புரத்திலிருந்து ஓடோடி வந்த கோப்பெருந்தேவி, தன் தலைவனின் உயிரற்ற உடலைத் தழுவிக்கொண்டு தன் உயிரை விட்டாள்!

இதுவே, பண்டைக்காலச் செங்கோல் அரசரினதும், கற்புடை மகளிரினதும் செயற் பாடாக இருந்தது! இதனை, அக்காலச் சான்றோர் போற்றினார்கள்.

"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி" (குறள் 118)

ஒரு நாட்டின் தலைவனும் சான்றாண்மை உள்ளவனாகச் செங்கோலனாக இருக்க வேண்டும்; பகை, நொதுமல், நட்பு என ஒரு பக்கம் (கோடாமை) சாராமை இருக்க வேண் டும் என்பது வள்ளுவர் கூறும் நெறிமுறையாகும்; அதுவே சான்றோர்க்கு அழகாகும் என்பு தும் அவரது அறிவுரையாகும்.

மேலும் சான்றோர் பற்றிப் புறநானூற்றுப் புலவரான கண்ணகனார் கூறுவதைப் பார்ப்போம்.

"பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும், தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை,
ஒருவழித் தோன்றியாங்கு. என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப,
சாலார், சாலார் பாலர் ஆகுபவே" (புறநானூறு 218)

என்கிறார்.

அதாவது, பொன், பவளம், முத்து, மணி என்பன வெவ்வேறு இடங்களிலிருந்து பெறப்படுவன. ஆயினும் அவற்றைத் தொகுத்து ஒரு அணிகலன் ஆக்கும்போது ஒன்றுபட்டு அந்த அணிகலனை அழகு செய்கின்றன. அதுபோலவே சான்றோரும் ஒரு இடத்தில் சேரும்போது சான்றோர் பக்கமே சேருவார்கள்; அதே நேரம் சாலார் - சான்றாண்மை இல்லாதவர்கள் சாலார் பகுதியிலேயே சேர்ந்து கொள்வார்கள் என்பதாம்.

ஆகவே, எல்லாத் தேயங்களிலும் ஊர்களிலும் சான்றோர்கள் இருக்கவேண்டும் என்பதும், அவர்கள் நடுநிலையாளர்களாய் செயலாற்ற வேண்டும் என்பதும் அவசியமாகிறது.

"சான்றோரில்லாத் தொல்பதி இருக்கையில்
தேன் தேர் குறவர் தேயம் நன்றே"

என்ற அறிவுரையையும் நமது சித்தத்தில் இருத்துவோமாக.

இவ்விதமாகச் சான்றோர் எமது சமுதாயத்திலிருந்தே உருவாக வேண்டும்.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே (புறம் 312)"

என்கிறாள் ஒருதாய். புறந்தருதல் என்றால் நல்லமுறையில் வளர்த்து விடுதலாகும். "பெற்றாளே பெற்றாள்; பிறர் நகைக்கப் பெற்றாள்" என்றில்லாமல் வளர்த்து விட்டால், அவனைச் சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடன் என்கிறாள். பிள்ளை கல்வி கேள்விகளில் வல்லவனாய்ச் சான்றோனாய் வந்துவிட்டான் என்றால், உலகம் அவனைப் போற்றும். அப் போற்றுதலைக் கேட்ட தாய், அப்பிள்ளையைப் பெற்ற பொழுதில் நேர்ந்த துன்பத்தையெல்லாம் மறந்துபோய் மகிழ்ச்சிக் கடலில் மிதப்பாள் என்கிறார் திருவள்ளுவர்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்" (குறள் 69)

என்பது பாடல். தாய் தன் பிள்ளையைச் சான்றோன் என்பதும், தந்தை சொல்வதும் தற்புகழ்ச்சியாகும்; சான்றோன் என உலகம் சொல்லும்போது அதன் மதிப்பு அதிகமாகும்.

ஆகவே, சான்றோர்களாக மக்களைச் சமூகம் உருவாக்க வேண்டும்; அச்சான்றோர் நடுநிலையாளராய் இருக்கவேண்டும்; அதுதான் அவர்களுக்கு அழகாகும் என்பது பெற்றாம்.

**(பி.கு):**

நாட்டிலே அரச சபையிலே செங்கோல் வைப்பதும், மக்கள் நீதி தவறாமல் நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் கவனிப்பதற்கும் தவறியோரைத் திருந்தி நடக்க வழிசெய்வதற்குமேயாகும். மக்கள் கோடாமை இருப்பதைக் கவனிக்கவே கோடுகள் - நீதிமன்றங்கள் தோன்றின எனக் கொள்ளல் தவறாகாது.

---

## சாப்பிட்டபின் பழம் சாப்பிடலாமா?

பொதுவாக நாம் சாப்பிட்ட பின்பு பழம் சாப்பிடுவது வழமையான ஒன்று. ஆனால் இவ்வாறு சாப்பிட்ட பின்பு பழம் சாப்பிடலாமா என்பது பற்றி இப்போது பார்ப்போம்.

வாழைப்பழத்தை எப்போதும் நாம் உணவு சாப்பிடுவதற்கு முன்பே சாப்பிட வேண்டும். வாழைப்பழத்திலுள்ள தாது உப்புக்களும், விற்றமின்களும் அப்போதுதான் எமது உடலில் எளிதில் சேரும். இதற்கு மாறாகச் சாப்பிட்ட பின்பு பழம் சாப்பிட்டால் அந்தச் சத்துக்கள் சாப்பாடு ஜீரணமாகும்போது அதனுடன் இணைந்து வெளியேறிவிடும். அப்பிள், திராட்சை போன்றவற்றையும் வெறும் வயிற்றில் சாப்பிடுவதே சிறந்தது.

(கட்டுரைத்தொடர் - 12

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பதினெண் சித்தர்களில் சிவ வாக்கியர்

### 01) சிவ வாக்கியரின் சிந்தனை

சித்தர்களில் தலைசிறந்தவர் சிவவாக்கியர். சித்தபுருஷர்களில் மூலவராகிய தவயோகி திருமூலரின் திருவிளக்கமாகத் தோன்றியவர். தாயுமானவரால் குறிப்பிடப்படும் பெருமைபெற்றவர். இவருடைய இயற்பெயர், காலம், பெற்றோர் முதலிய விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இவர் இயற்றிய நூலுக்கு சிவவாக்கியம் என்று பெயர். இந்நூலின் பெயரைக் கொண்டு இவர் சிவவாக்கியர் என்று அழைக்கப்படுகிறார். சிவவாக்கியாரின் பாடல்கள் ஞானக் கோவை என்ற தொகுப்பிலே முதலில் அமைந்திருக்கின்றன.

சிவவாக்கியரின் பாடல்கள் முழுவதும் சந்தப் பாடல்களாக அமைந்துள்ளன. இவருடைய பாடல்களில் இக்காலத்திற்கு ஏற்ற புரட்சிகர சிந்தனைகள் பல இடம்பெற்றுள்ளன. உருவவழிபாடு, தலயாத்திரை, மதவாதம், வேதம் ஓதுதல், சாதி ஆசாரம் முதலியவற்றை எதிர்த்து "ஒன்றே குலம் ஒருவனே தேவன்", "உள்ளம் பெரும் கோயில்" என்னும் கொள்கைகள் உணர்த்தப்பட்டுள்ளன.

இவர் முதலில் நாத்திகராக இருந்து சைவராக மாறி சிவவாக்கியர் ஆனார் என்று கூறப்படுகிறது. இவருடைய பாடல்களில் வடமொழிச் சொற்கள் பல கலந்துள்ளன. தோஷம், தூரம், ஞானம், அண்டம், சோதி, விருத்தர், பாலர், நாதர், தினம், செபம், சதா, நாமம், சாத்திரம், சத்தம், விந்து, சம்பிரதாயம், சீவன், ஏகபோகம், ஆதி, அநாதி என்ற எண்ணற்ற வடமொழிச் சொற்கள் கலந்து காணப்படுகின்றன. இவருடைய உள்ளத்தில் தன் எண்ணத்தில் தோன்றிய கருத்தினை மக்களுக்கு விளங்கக் கூடியதாகச் சொல்ல வேண்டும் என்ற கருத்தே காணப்பட்டது. தன் கருத்தை விளக்குவதற்கான சொற்கள் தமிழோ, வடமொழியோ எதுவானாலும் அவற்றைத் தாராளமாக அமைத்துப் பாடியுள்ளார்.

சிவவாக்கியரின் பாடல்களில் "சிவ" என்னும் சொல் மிகுதியாகக் காணப்படுகிறது. சைவ, வைணவ சமயங்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளை நீக்கி சமரசம் ஏற்படு வதற்காகப் பணியாற்றியவர்களில் சிவவாக்கியரும் ஒருவராக இருந்தார். சிவவாக்கியர் உட்படச் சித்தர்களில் பலரும் மத சமரசத்தையே வலியுறுத்தினார்கள். மூடநம்பிக்கையைப் பலமாகச் சாடும் சித்தர்களிடம் மதவெறுப்போ அல்லது அளவு கடந்த மதவெறியோ காணப்படுவதில்லை. இவர் விக்கிரக ஆராதனையை மிக வன்மையாகக் கண்டிக்கிறார்; சாதிப் பாகுபாட்டினை வன்மையாகச் சாடுகின்றார். அடியவர்களின் உள்ளத்தில் இறைவன் வீற்றிருப்பார் என்கிறார். ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்பதே இவருடைய கொள்கை ஆகும். சைவ நாற்பாத நெறிகளில் சரியை, கிரியை மார்க்கங்களைக் கண்டித்தவர். யோக மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் பின்பற்றவேண்டும் என்று வலியுறுத்தியவர். நாத்திகரோ என்று எண்ணுமளவிற்குப் புரட்சிகரமான கருத்துக்களைக் கூறியவர்.

**02) மாண்டவர் மீள்வதில்லை**

பாமர மக்களிடம் பல்வேறு மூடநம்பிக்கைகள் காணப்படுகின்றன. மக்களிடம் உள்ள மூட நம்பிக்கைகளைக் களைந்து எறிவதற்கு அறிவியல் ரீதியான சிந்தனைகள் வளர்ச்சி பெறல் வேண்டும். சித்தர்கள் பகுத்தறிவு வாதிகளாக இருந்து மூடநம்பிக்கைகளை ஒழிக்கப் பாடுபட்டு வந்தார்கள். செத்தவர்களைப் பிழைக்க வைக்கலாம் என்ற மூடநம்பிக்கை இன்றும் சில மக்களிடம் காணப்படுகிறது. தமிழகத்திலேயே இராமலிங்க சுவாமிகளின் பக்தர்கள் சிலரிடம் இந்த நம்பிக்கை இன்றும் இருந்து வருகிறது. இவருடைய சில செய்யுட்களிலே "செத்தார் பிழைப்பார்" என்று அவர் பாடியிருப்பதைக் கொண்டு அவருடைய சிஷ்யர்கள் சிலர் இவ்வாறு நம்புகின்றனர். மனிதத் தன்மையற்று, சுதந்திரமற்று அடிமையாக பிணம்போல நடமாடுபவர்கள் விழித்துக் கொள்வார்கள் என்பதே இராமலிங்க சுவாமிகள் பாடிய பாடல் வரியின் உண்மைப் பொருளாகும்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர்கள் எவரும் மீள்வதில்லை. இறந்தவர்களுக்காக அழுது புலம்புபவர்களும் ஒருநாள் அவ்வழியில் போகவேண்டி வரும் என்பதே இயற்கையின் நியதி ஆகும். எனவே உயிரோடு வாழும்வரை தான தர்மங்களைச் செய்து மகிழ்ச்சியோடு வாழ்வதே சிறந்ததாகும் எனத் தமிழ் மூதாட்டி ஔவையார் தனது நல்வழிப் பாடலில் கூறியுள்ளார்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர்- வேண்டாம்
"நமக்கும் அதுவழியே; நாம் போம் அளவும்
எமக்கு என்" இட்டு உண்டு இரும்.

(நல்வழி- 10)

செத்தார் பிழைப்பதில்லை என்பதைச் சிறந்த உதாரணங்களுடன் அமைத்துச் சிவவாக்கியர் பாடியுள்ளார். மடியிலிருந்து கறந்த பாலை மீண்டும் முலைக்காம்பின் வழியே ஏற்றிவிட முடியாது. ஏற்றினாலும் ஏறுவதில்லை. கடைந்தெடுத்த வெண்ணையை மீண்டும் மோருடன் ஒன்றாகக் கலந்துவிடும்படி செய்ய முடியாது. உடைந்த சங்கிலே உடைவதற்கு முன் எழும்பிய ஓசையை புகுத்திவிட முடியாது. வெளிப்பட்ட உயிர்களும் மீண்டும் உடம்பிலே புகுவதில்லை. மலர்ந்து உதிர்ந்த பூவும், வெம்பி விழுந்த காயும் மீண்டும் மரத்திலே போய் ஒட்டிக்கொள்வதில்லை. இவற்றைப் போலவே இறந்தவர் என்றும் உயிருடன் பிழைப்பதில்லை. இறந்தவர் பிழைப்பர் என்று கூறுவதெல்லாம் வெறும் பொய்;; பயனற்ற கற்பனை என்பார் சிவவாக்கியர்.

கறந்த பால் முலை புகா; கடைந்த வெண்ணெய் மோர் புகா!
உடைந்து போன சங்கின் ஓசை உயிர்களும் உடல் புகா!
விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம்புகா!
இறந்தவர் பிழைப்பதில்லை இல்லை; இல்லை; இல்லையே.

**03) உள்ளத் தூய்மை**

ஞானம் ஒருவனிடம் உதயமாகிவிட்டால் ஆதவனைக் கண்ட பனிபோல அஞ்ஞானம் ஆன்மாவை விட்டு நீங்கிவிடும். ஞானத் தீ எல்லா வினைகளையும் பொசுக்கும். திருவருள்

ஒளியாகிய ஞானத்தின் முன்பு பிறவி காரணமாக ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தும் நீங்கும். ஞானம் என்னும் விளக்கை ஏற்றினால் எல்லையற்ற பரம்பொருளை அகத்திலே அறிந்து கொள்ள முடியும். அப்பரம்பொருளின் முன்பு மலமாயா கன்மங்களாகிய உடலின் துன்பங்கள் யாவும் அகலும். திருவருளாகிய அறிவு விளக்கைப் பெற்றவர்கள் திருவருளாகிய விளக்கினைத் திருமேனியாகக் கொண்டு ஒளிர்ந்து விளங்கும் விளக்காகிய சிவத்துள் ஒடுங்கிச் சிவமாய்த் திகழ்வர்.

விளக்கினை யேற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே

(திருமந்திரம்- 1818)

சித்தர்களின் போக்கே ஒரு தனிப் போக்காகும். இவர்கள் ஆடம்பரத்தை விரும்பாத வர்கள். மக்களுடைய வாழ்வைச் செம்மைப்படுத்த நினைத்தவர்கள். மனித சமூகத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளைப் போக்க விரும்பியவர்கள். எல்லா மனிதர்களையும் உயர்ந்த அறிவாளிகளாக்க எண்ணியவர்கள்.

ஆடம்பரமான பெரிய கோயில்களைக் கட்டுவது; நான்கு பக்கமும் கோபுரங்களை அமைப்பது, கடவுள் அருளைப் பெறுவதற்கு மந்திரங்களைச் செபிப்பது, பெரும் செலவில் கோயில் திருவிழாக்களைச் செய்வது என்பவற்றினால் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை. அகத்திலே ஞான ஒளி பிரகாசிக்க ஆரம்பித்துவிட்டால் அஞ்ஞானம், ஆன்மாவை விட்டு அகன்றுவிடும். அகத்திலே இறைவனைக் காண்கின்ற பேறு கிடைத்துவிடும் என்பதைப் பின்வரும் சிவவாக்கியரின் பாடல் தெளிவாக விளக்குகிறது.

கோயில் பள்ளி ஏதடா; குறித்து நின்றது ஏதடா?
வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள் ஏதடா?
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலாம் இறையையே.

உள்ளத்தில் தூய்மை உள்ளவர்கள், மனமாசற்றவர்கள், மௌனமாக இருந்து ஞானநெறியிலே நடப்பவர்கள் உண்மையான யோகிகளாகத் திகழ்வார்கள். மனத்திலே குப்பை கூளங்களைச் சுமந்துகொண்டு திரிபவன் உண்மையான யோகியாகவோ, ஞானியாகவோ இருக்கமாட்டான். உள்ளத்திலே குற்றங்களுக்கு ஊற்றுக் குழியான ஆசையை வைத்திருப்பவர்கள் நாட்டிலிருந்தாலும், காட்டிலிருந்தாலும் ஒரே மாதிரியாகவே இருப்பார்கள். அவர்களுடைய மனப் பாசி, அழுக்கு, குற்றம் எதுவும் அவர்களை விட்டு நீங்காது. அவர்கள் அன்பையோ அறிவையோ பெறமாட்டார்கள். உண்மையான அறிவான இறைவனைக் காணவும் மாட்டார்கள். உள்ளத்திலே தூய்மை உள்ளவர்கள் சிற்றின்ப வாழ்வில் இருந்தாலும் கெட்டுப்போய் விட மாட்டார்கள். உள்ளத் தூய்மை காரணமாக அவர்கள் பிறவித் துன்பத்திலிருந்தும் நீங்குவார்கள்.

மனத்து அகத்து அழுக்கு அறாத மவுன ஞானயோகிகள்
வனத்து அகத்து இருக்கினும் மனத்து அகத்து அழுக்கு அறார்

மனத்து அகத்து அழுக்கு அறுத்த மவுன ஞான யோகிகள் இருப்பரே
முலைத்தடத்து இருக்கினும் பிறப்பு அறுத்து இருப்பரே.
-சிவவாக்கியர்-

உலகில் உள்ள இறைவனைத் தேடி மனிதர்கள் அங்கும் இங்கும் அலைகிறார்கள். நம்முள்ளே இருக்கும் இறைவனை அறிந்துணர்வதற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும். இறைவன் இந்தப் பரந்த உலகத்தில் நமக்கு மிகவும் தூரத்தில் உள்ளான் என்று எண்ணிச் சோம்பலுற்று நிற்காதீர்கள். அகத்துறையும் அழகனாகிய இறைவன் நம்முள்ளே இருக்கிறான் என்பதை உணருங்கள். இறைவனை எல்லா இடமும் தேடி நாம் அலைய வேண்டிய அவசியம் இல்லை.

தூரம் தூரம் தூரம் என்று சொல்லுவார்கள், சோம்பர்கள்
பாரும் விண்ணும் எங்குமாய்ப் பரந்த இப்பராபரம்
ஊருநாடு காடுதேடி உழன்று தேடும் ஊமைகாள்
நேரதாக உம்முள்ளே அறிந்துணர்ந்து நில்லுமே.

## 04) அறிவே தெய்வம்

அறிவே தெய்வம் என்பது ஆன்றோர்கள் கொள்கை. எல்லா நன்மைகளுக்கும், இன்பத்திற்கும் அடிப்படையாக அமைந்திருப்பது அறிவேயாகும். அறிவினால் தான் மக்கள் இயற்கை சக்திகளை எல்லாம் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். அறிவு என்பது பெரு நெருப்பு; அதை சிறு நீர்த்துளிகள் ஒன்றும் செய்துவிட முடியாது. எந்தத் திரையினாலும் மறைக்க முடியாத பெரிய விளக்கு அறிவு. அறியாமை என்னும் இருள் அதை எதிர்த்து நிற்க முடியாது. அறிவு என்பது தமிழ்ச்சொல்; ஞானம் என்பது வடமொழிச் சொல். ஞானி என்றாலும் அறிஞர் என்றாலும் கருத்துவேறுபாடு இல்லை. ஞானம் என்னும் பெரிய ஒளிவிளக்கு நமக்குள்தான் இருக்கிறது. இதனை அறிந்துவிட்டால் அமைதியாக வாழமுடியும். அல்லல் இன்றி அலைச்சல் இன்று இன்பமாக வாழமுடியும். ஞானத்தைத் தவிர ஒப்பற்ற உயர்ந்த ஆற்றல் உள்ள பொருள் எதுவும் இல்லை.

ஞான நூல்கள் தேடியே நவின்ற ஞானயோகிகாள்!
ஞானமான சோதியை நாடி உள் அறிகிலீர்!
ஞானம் ஆகிநின்றது ஓர் நாதனை அறிந்தபின்
ஞானம் அல்லது இல்லைவேறு; நாம் உரைத்தது உண்மையே.

## 05) யாக்கை நிலையாமை

மண்ணாலாகிய குடம் உடையுமாயின் அதன் பகுதியாகிய ஓடானது உதவும் என்று வைத்திருப்பர். உடம்பு என்ற பாத்திரம் உடைந்தால் ஒரு கணப்பொழுதும் அதனை வீட்டில் வைக்க மாட்டார்கள் என்பதைக்,

குடமுடைந்தால் அவை ஓடென்று வைப்பர்
உடலுடைந்தால் இறைப் போதும் வையாரே
எனத் திருமந்திரம் கூறுகிறது.

மண்ணாலும் வெண்கலத்தாலும் ஆன பானைகள் உடைந்தால் அதை வேண்டும் என்று பேணிப் பாதுகாப்பார்கள். ஆனால் நமது உடலைவிட்டு உயிர் பிரிந்தால் இது நாறும் என்று தூக்கிப் போடுவார்கள். இறைவனின் மாயா விளையாட்டுக்கள் இதுதான் என்கிறார் சிவவாக்கியர்.

மண்கலம் கவிழ்ந்தபோது வைத்து வைத்து அடுக்குவர்
வெண்கலம் கவிழ்ந்தபோது வேணும் என்று பேணுவார்
நம்கலம் கவிழ்ந்தபோது நாறும் என்று போடுவார்
என் கலந்து நின்ற மாயம் என்ன மாயம் ஈசனே.

## 06) யோக நிலை

யோகம் என்பது யுக் என்ற வடமொழிச் சொல்லின் காரணப் பெயராகும். "யுக்" என்றால் ஒன்று சேர்தல். நம்முடலில் உள்ள சிற்றுயிர் பேருயிருடன் (ஈசனுடன்) கலத்தல் யோகம் எனப்படும். இந்த நிலையை சாயுச்சியம் என்று சைவ சித்தாந்தம் கூறும். நம்முடைய மூலாதாரத்தில் அக்கினி, வடிவில் உள்ள குண்டலினி சக்தியை உணர்ந்தால் தியானம் செய்தால்,வயது முதிராமல் பாலனாக வாழமுடியும்; இறைவனுடன் சேரவும் முடியும். இது ஆலகால விஷத்தை உண்ட சிவன்மீதும், சக்தி மீதும் ஆணை. சத்தியம் எனச் சிவவாக்கியர் தான் அருளிய பாடலில் குறிப்பிடுகின்றார்.

மூலநாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை
நாலு நாழி உம்முளே நாடியே இருந்தபின்
பாலனாகி வாழலாம் பரப்பிரம்மம் ஆகலாம்
ஆலம் உண்ட கண்டர் ஆணை அம்மை ஆணை உண்மையே

உடலிலுள்ள வாசல்கள் ஒன்பது. (கண்-2, காது-2, மூக்கு-2, வாய்-1, ஆசனவாய்-1, நீர்வழி-1) சொல்லும் வாசலாக கண், காது, மூக்கு, வாய், உடல் ஆகிய ஐந்தும் உள்ளன. ஒன்பது வாசல்களையும் அல்லல் வாசல் என்றும் மற்றைய ஐந்தையும் சொல்லும் வாசல் என்றும் சிவவாக்கியர் குறிப்பிடுகின்றார். இவற்றை அடைத்து அறிவு வாசலாகிய ஞான வாசலைத் திறந்தால் பிறவிநோய் நீங்கிவிடும். மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தி ஆறு ஆதாரத்தையும் தாண்டி மேலே செல்லும்பொழுது ஞான வாசலாகிய ஈசன் தரிசனத்தைப் பெறலாம்.

அல்லல் வாசல் ஒன்பதும் அடைந்தடைந்த வாசலும்
சொல்லும் வாசல் ஓர் ஐந்தும் சொம்மி விம்மி நின்றது
நல்ல வாசலைத் திறந்து ஞானவாசல் ஊடுபோய்
எல்லை வாசல் கண்டவர் இனி பிறப்பது இல்லையே?

## 07) உருவ வழிபாடு

உள்ளத்தைக் கோயிலாக்கிக் கொண்ட சித்த புருஷர்களில் சிலர் உருவ வழிபாட்டை ஏற்கவில்லை. ஆன்மீக நிலையின் ஆரம்பப் படியில் இருப்பவர்களுக்கு உருவ வழிபாடு அவசியமாகிறது. ஆனால் பக்குவநிலை பெற்றவர்களுக்கு உருவவழிபாடு, கோயில் வழிபாடு தேவையற்றதாகி விடுகிறது. சாதாரண மக்களுக்கு, சிந்தனாசக்தி அற்ற மக்களுக்குக்

கடவுள் உங்கள் உள்ளத்தில் இருக்கிறான் என்றால் புரியாமலிருக்கும். ஓர் உருவத்தைக் காட்டி, படத்தைக் காட்டி, ஒரு கோயிலைக் காட்டி, இடம் ஒன்றைக் காட்டி அதில் தான் கடவுள் இருக்கிறார் என்று கூறினால்த்தான் புரியும். சிலை வடிக்கும்போது சப்தம் தருகின்ற கல்லை இரண்டாக உடைத்து, ஒன்றில் இறைவன் சிலையையும், மற்றையதை வாசற் படியாகவும் உபயோகப்படுத்துகின்றோம். பூசை செய்யப்படும் கல்லுக்கு மட்டும் பூவும் நீரும் சாத்துகின்றோம். வாசற் படியில் வைத்த கல்லைக் காலால் மிதிக்கிறோம். இதில் எந்தக் கல் இறைவனுக்கு உகந்த கல் என்று சொல்ல முடியுமா? என வினா எழுப்புகின்றார் சிவவாக்கியர்.

ஓசையுள்ள கல்லை நீர் உடைத்து இரண்டாய் செய்துமே
வாசலில் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்துறீர்
ஈசனுக்கு உகந்த கல் எந்தக் கல்லு சொல்லுமே.

**08) ஞானமே இறைவன்**

அகத்திலே ஞான ஒளி பிரகாசித்தால் ஆத்மாவைப் பீடித்திருக்கின்ற அஞ்ஞான இருள் ஆதவனைக் கண்ட பனிபோல ஆன்மாவை விட்டு அகன்று விடும். பிரமத்தை அறிந்தவன் பிரமமாகிறான். (பிரம்ம வித் பிரமைவ பவதி) என்றே பகவத்கீதையும் கூறுகிறது. தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாக மாறிவிடுகிறான். (தியானத் யாத்துரு தேய ரூபா) என லலிதா சகஸ்ர நாமமும் குறிப்பிடுகிறது. ஞானயோகி ஒளியுள் ஒளியாகத் திகழ்வான். ஞானத்தைத் தேடிச் செல்லும் ஞான யோகிகளே! நம்முள்ளே ஞானமாக, ஜோதி வடிவாக உள்ள இறைவனை உணர்ந்தபின் ஞானம் என்பது இறைவன்தான் என்பதை உணர்வீர்கள். இறைவனும் அறிவும் (ஞானமும்) வேறல்ல ஒன்றுதான் எனச் சிவவாக்கியர் குறிப்பிடுகின்றார்.

ஞான நூல்கள் தேடியே நவின்ற ஞான யோகிகாள்
ஞானமான சோதியை நாடி உள் அறிகிலீர்
ஞானம் ஆகி நின்ற ஓர் நாதனை அறிந்தபின்
ஞானம் அல்லது இல்லை வேறு நாம் உரைத்தது உண்மையே.

(தொடரும்...

**ஆன்மீகச் சிந்தனை**

நித்திரை செய்பவனைக் கொல்வதற்கு வீரம் தேவை இல்லை. நல்ல நம்பிக்கை வைத்தவர்களை ஏமாற்ற அதிக சாமர்த்தியம் வேண்டியதில்லை.

உன்னைத் திருத்துவது உனக்கு எவ்வளவு கஷ்டமாக உள்ளது என்பதை நீ புரிந்து கொள்வாய். ஆனால், மற்றவர்களைத் திருத்துவதற்கு உனக்கு அதிக சந்தர்ப்பம் இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளவாய்.

# நீ துயரப்படுகின்றாய் சுகம் வரும்

–திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள்–

மனிதன் மனிதனாக வாழ்ந்து தேவராக உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த வையகம் படைக்கப்பட்டுள்ளது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்" என்பதையே திருவள்ளுவமும் எமக்குக் கோடிட்டுக் கூறுகிறது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

(குறள்- 50)

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இப்பிறப்பில் உரிய பேறினை அடையவேண்டுமாயின் இல்வாழ்க்கையைச் சந்தித்தேயாகவேண்டும். அத்தகு நிலையில் இன்பமும் துன்பமும் மிகுந்து வரும். அதனால் இன்ப நிலையிலும் பார்க்க, துன்பத்தையே கூடுதலாக உன்னால் அனுபவிக்க முடியும் என்பது உலகத்தில் நாளாந்தம் நடைபெறும் செய்திகள்மூலம் உணர்ந்திட முடிகிறது. இந்நிலைக்கு அடிப்படைக் காரணம் பேராசையேயாகும். இதனை விட்டுவிடுவதென்பது இலேசான காரியமல்ல. அனுபவித்தாலன்றி விடுபட முடியாததேயாகும். அதற்கு ஒரேயொரு வழியாகவே இல்லறம் சிருஷ்டிக்கப்படுகிறது. அப்போ ஒரு கேள்வி எழலாம். இல்லறம் என்பது துன்பமா? இல்லை! துன்பத்தை நாமே சம்பாதிக்கின்றோம். எப்படி? எமக்குக் கிடைத்ததைக் கொண்டு வாழத் தெரியாமையே அதற்குக் காரணமாகும். அதி உச்சமாக வாழ ஆசைப்படுகின்றோம். பூமாதேவியின் பொறுமையை ஒருபோதும் எண்ணிப் பார்ப்பதில்லை. அதனையே மாசுபடுத்திவிட்டோம்.

"சிறுகக் கட்டி பெருக வாழ்" என்பது பொய்யாகி விட்டது. மாறாகப் பெருகக் கட்டி சிறுக வாழ்கின்றோம்.

திருக்குறளாக வாழ முற்படுகின்றோமா? தேவாரமாக வாழ முற்படுகின்றோமா? திருவாசகமாக வாழ முற்படுகின்றோமா? இந்துவாக வாழ முற்படுகின்றோமா? நீதிநூலாக வாழ முற்படுகின்றோமா? ஆனால் இவ்வாறெல்லாம் வாழ ஆசைப்பட்டவர்தான், சைவ சமயத்திற்கு வழிகாட்டியாக அமைந்த சிவப்பெரியார் அமரர் கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களாவார். அவர் எமது சமயத்தை ஆரவாரப்படுத்தாது, புனிதமாக, எளிமையாக, வாழ்வாங்கு, சிவநெறியில் வாழ்ந்தவர். அவருக்கு ஆதார சுருதியாக அமைந்தவை தேவார, திருவாசகங்களேயாம். கூடுதலாக அவரது மூச்சு திருவாசகமே. அதனாலன்றோ அவர் இறக்கும் தறுவாயில் அவரது வேண்டுகோளுக்கிணங்க திருவாசகம் பாடப்பட்டது. இவ்வுலக ஈடேற்றம் என்பது திருமுறைகளிலே சொல்லப்படுகிறது. அவற்றைத் தினமும் ஓதி வருபவர்களுக்கு யாதொரு துன்பங்களும், சங்கடங்களும், வில்லங்கங்களும் வந்து அணுகாது என்பதே இங்கு எழுதப்படுவதன் செய்தியாகும். துயரப்படாதீர்கள்.

## சுகம் வரும்

ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு நாளும் கோள்களும் யாதொரு தீங்கும் செய்யாது என்பது சம்பந்தரின் உறுதியான வாக்காகும். சமணர்களை வாதில் வெல்வதற்கு வரமளித்த பதிகம் கோளறுபதிகமாகும். இந்தப் பதிகத்தின் முதலாவது பாடல், "வேயுறு தோளி பங்கன்" என ஆரம்பித்து, பதினொரு பாடல்களிலும் "நல்ல" என்ற சொல்லை, "நாற்பது தடவை, பாவித்து பாலித்திருக்கின்றார். நாம் நல்லது என்ற சொல்லை எப்போதாவது, யாருக்காவது நல்லபடியாகப் பாவித்திருக்கிறோமா? பாவித்தால் குறைந்தா போய்விடுவோம். ஒவ்வொரு நாளும் ஒரு பதிகத்தை ஓதுவதற்கு இந்து சமயிகளாகிய யாம் உறுதிபேண வேண்டும். எனக்காகவா சொல்கின்றேன். உங்களுக்காகத் தானே. பதினோராவது பாடலை ஓதிப்பாருங்கள், நவக்கிரகங்களால் ஏற்படும் எல்லாவித தோஷங்களும் தானாக விலகிப்போகும். ஓதாவிட்டால் எழுதிப் பாருங்கள். சுகம் வரும்.

திருச்சிற்றம்பலம்

தேனமர் பொழில் கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி<br>
வளர் செம்பொன் எங்கும் நிகழ<br>
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து<br>
மறைஞான ஞான முனிவன்,<br>
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து<br>
நலியாத வண்ணம் உரைசெய்,<br>
ஆனசொல் மாலை யோதும் அடியார்கள் வானில்<br>
அரசாள்வர் ஆணை நமதே!

திருச்சிற்றம்பலம்

## ஆறுமுகமானவன்

உலகைக் காக்க வந்தமுகம் ஒன்று

ஊழ் வினை நீக்கித் தந்த முகம் ஒன்று

மும் மலம் அழிக்க நின்ற முகம் ஒன்று

ஓங்கார உட் பொருளை அறிந்த முகம் ஒன்று

ஐங்கரனைத் துணைக்கு அழைத்த முகம் ஒன்று

[redacted]

[redacted]


-பொ. பாலேஸ்வரன்-

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 30. மாயை யாகிய விளக்கு

விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து.

**பொருள்:**

மாயையினின்றும் உடம்பு முதலியவை தோன்றி உயிர்களைப் பொருந்துகின்றன. அவ்வாறு அவை வந்து பொருந்துவது அந்த அந்த உயிர்களின் வினைக்கு ஏற்பவேயாகும். ஆணவமாகிய இருள் நீங்கி விடிவு வரும் வரையிலும் மாயையின் காரியமாகிய இந்த உடம்பு முதலியவை உயிருக்கு விளக்குப் போல் நின்று உதவுகின்றன.

**சொற்பொருள்:**

மாயை வடிவு ஆதி- மாயையினின்றும் தோன்றிய உடம்பு முதலியவை, கன்மத்து வந்து- உயிர்களை, அவைகளின் வினைக்கு ஏற்ப வந்து பொருந்தி, விடிவாம் அளவும்- ஆணவமாகிய இருள் நீங்கி விடியும் வரையில், விளக்கு அனைய- விளக்குப்போல நின்று உயிர்களுக்கு நன்மை செய்வனவாம்.

**விளக்கம்:**

**விடியும் வரையில் விளக்கு:**

இதுவரை இருள் மலமாகிய ஆணவத்தின் இயல்பையே பேசி வந்த ஆசிரியர் இந்த இறுதிச் செய்யுளில் அதற்கு மாற்றுப் பொருளாகிய மாயையின் தன்மையினைக் கூறலுறுகிறார்.

ஆணவம் அறிவை மறைக்கின்ற இருள் என்றால், மாயை அறிவை விளக்குகின்ற ஒளிப்பொருள் எனலாம். சூழ்ந்துள்ள இருளைச் சிறிதளவு நீக்கிக் கண்ணுக்குக் காட்டுகின்ற விளக்குப்போல மாயை உயிரைப் பற்றியுள்ள ஆணவ இருளை ஓரளவு நீக்கி அதன் அறிவை விளங்க வைக்கின்றது.

விளக்கொளியினால் இருள் முற்றிலும் நீங்கி விடுவதில்லை. விளக்கொளி சிற்றொளியாக இருப்பதனால் அது சிறிதளவே இருளை நீக்குவதாக உள்ளது. ஒன்றுமே தெரியாத இருட்டில் விளக்கினை ஏற்றினால் அந்த விளக்கொளி இருளைச் சிறிதே விலக்கிப் பொருளை

ஒருவாறு காணும்படி செய்கிறது. அந்தச் சிறிய விளக்கொளியும் இல்லையென்றால் நம்மால் யாதொன்றையும் காணமுடியாத நிலையே உளதாகும்.

நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள உடம்பு மாயையினால் ஆனது. மாயையை விளக்கு எனக் குறிப்பிட்டோம். எனவே இந்த உடம்பும் விளக்குப் போன்றதேயாகும். உடம்பும் உடம்பிலுள்ள ஐம்பொறி முதலிய கருவிகளும் செயற்படுகிறபோது நமக்குப் புறவுலகைப் பற்றிய அறிவு உண்டாகிறது. அவை செயலற்றுக் கிடக்கின்ற உறக்க நிலையில் நாம் யாதொன்றையும் அறியமாட்டாமல் அறியாமையே வடிவாய் இருக்கின்றோம். இதனால் உடம்பினாலேயே நமக்கு அறிவு விளங்குகிறது என்பது புலனாகும். இது பற்றியே உடம்பினை விளக்கு என்றனர்.

விளக்கு என்பது ஓர் இடைக்கால ஏற்பாடே. அதுவே இருளை முற்றிலும் நீக்கிவிடாது. இருள் முழுவதும் நீங்க வேண்டுமாயின் பேரொளியாகிய சூரியவொளி வரவேண்டும். விளக்கொளியால் நீங்கியும் நீங்காமலும் இருந்த இருள் சூரியவொளி வரும் போதே அறவே அகலும். அவ்விடியல் வரும் வரையில் இருளை நீக்கிக் கொள்வதற்கு ஓர் இடைக்காலத் துணையாக விளக்கினைக் கொள்கின்றோம். இறைவன் நமக்கு உடம்பினைக் கொடுத்ததும் இம்முறையிலேதான். நாம் உடம்போடு கூடியிருக்கின்ற நிலையும் ஓர் இடைக்கால ஏற்பாடுதான். ஆணவமாகிய இருளினின்றும் சிறிது விடுபடுவதற்கு இந்த உடம்பாகிய விளக்கு உதவுகிறது. ஆனால், அதுவே ஆணவ இருளை முற்றிலும் நீக்கிவிடாது. இருள் மலம் முழுவதும் நீங்க வேண்டுமாயின் திருவருளாகிய சூரியவொளி வரவேண்டும். மாயா காரியமாகிய விளக்கொளியால் சிறிது விலகிய ஆணவ இருள் திருவருள் ஒளி வரும்போதே அறவே அகன்றொழியும். அந்த நிலையே சுத்த நிலை எனப்படும். அதுவே ஆன்மாவுக்கு விடிவு காலம். அவ்விடியல் வரும் வரையில் அகவிருளை ஓரளவு நீக்கிக் கொள்வதற்குத் தனு, கரணம் முதலிய மாயா கருவிகள் இடைக்காலத் துணையாக அமைகின்றன. இது பற்றியே 'விடிவாம் அளவும் விளக்கு அனைய மாயை' என்றார் ஆசிரியர்.

**உடம்பு முதலியவை வினைக்கு ஏற்ப அமைதல்:**

'வடிவாதி' என்பதற்கு வடிவு முதலிய காரியங்கள் என்பது பொருள். வடிவு என்பது உடம்பு, தனு, கரணம், புவனம், போகம் என்னும் நான்கையுமே வடிவாதி என்று குறிப்பிட்டார்.

உடம்பு முதலியவை எல்லார்க்கும் ஒரேவகையாக அமையவில்லை என்பது கண்கூடு. சிலருக்கு வலிமையான உடம்பு. சிலருக்கு நொய்மையான உடம்பு. வலிமையான உடம்பாயிருந்தும் ஆயுள் குறைவான உடம்பாகச் சிலருக்கு அமைந்து விடுகிறது. நொய்மையான உடம்பாயிருந்தும் நீண்ட ஆயுள் உடையதாகச் சிலர் உடம்பு அமைந்து விடுகிறது. இவ்வாறு அவரவர் உடம்பில் அமைந்திருக்கும் கருவிகளும் வெவ்வேறு இயல்பினதாகவே உள்ளன. சிலருக்குக் கண்பொறி, செவிப்பொறி முதலியவை கூரியனவாக அமைந்து நலம் செய்கின்றன. வேறு சிலருக்கு அவை குறைபாடுடையனவாக் அமைந்து விடுகின்றன. இதற்கெல்லாம் என்ன காரணம்? அவரவரும் முன்னே செய்து கொண்ட வினையே இவ்வேறு பாடுகளுக்குக் காரணம் ஆகும். அந்த முன்வினை பிராரத்தவினை எனப் பெயர்பெறும்.

பிராரத்த வினையை ஒட்டியே இப்பிறவி அமைகிறது. அவரவரும் இப்பிறப்பில் தத்தமக்குரிய தனு, கரண, புவன, போகங்களைப் பிராரத்த வினைக்கு ஈடாகவே பெற்றுள்ளனர். இப்பிறப்பில் ஒருவர் துன்பத்தையே மிகுதியாக அனுபவிக்க வேண்டும் என்ற பிராரத்தம் இருந்தால் அதற்கேற்ப அவருக்கு நோயுள்ள உடம்பு (தனு) அமையும். நன்கு செயற்படாத கருவிகள் (கரணம்) அமையும். தீய சுற்றுச் சூழல் (புவனம்) அமையும். நுகர்பொருள் (போகம்) நிரம்பாத நிலை அமையும். இதுபோலவே ஒருவர் வாழ்வில் உயர் நிலையை அடைய வேண்டும் என்ற பிராரத்தம் இருந்தால் அதற்கேற்ப அவருக்கு முயற்சியுள்ள உடம்பு அமையும்; ஊக்கமுடன் செயற்படும் கருவிகள் அமையும்; வாய்ப்பான சூழலும் சார்பும் அமையும்.

இப்படி உடல், கருவி, இடம், நுகர்பொருள் ஆகிய நான்கும் அவரவர் கன்மத்திற்கு ஏற்பவே வந்து அமைவதனால் 'வடிவாதி கன்மத்து வந்து' என்று குறிப்பிட்டார் ஆசிரியர்.

---

## அருள்காணும் வேலவனின் பொருள் கூறும் சந்நிதியே!

பிள்ளைமதி பெருமான் திருவடியை யென்றும்
உள்ளுமவர்கட்குறாத பொருளுண்டோ
மெள்ள நறுநெய் விழைந்து விளக்குத் திருவுருவை
கள்ளவெங்காணும் கடலுங் காத்ததன்றோ!

ஆலில் தோன்றியமர்ந்த அமலன் திருவடியை
ஏத்துபவர்கட்கிசையான பொருளுண்டோ
சாத்திய வில்வம் தனக்குத்தளர் மோகனின்
மூத்தவறிவிதனான முத்தி கண்டதுவே!

பேயினத்தோடாடும் பெம்மான் திருவடியை நாளும்
கண்ணுற்றுத்தாழ்வோர்கள் காணாத பொருளுண்டோ
வாயிழையால் வலைதூண்டி கோவில் வகுத்த
தூயகுலக்கதிர்காமர் தொல்லுலகச் சந்நிதியே!

அச்சமும் அன்பும் தோன்றயடியினைப் பணிந்து சூழ்வோர்
உச்சியில் கரங்களேற யொளிவிழியருவி தாழ
விச்சுவ செந்தில்வேல் பெருமான் தன்னை
முச்சகமுழுவதும் போற்றும் முதல்வனை துதிக்கின்றோமே!

வேலே வேதகாரணமும்நீ வேதமோர் நான்கும்நீ
அருள் பாதமோர் நான்கும்நீ பதங்களோர் நான்கும்நீ
அலையொளி அறுபடை புவனகாரணரும் நீ
நாதத்தின் நற்கடாட்சப் பொருளினை நவிலவல்லார் யாவர்!

ஏகன்நீ அனேகன் நீயிருளும்நீ செந்திலொளியும் நீ!
போகிநீ யோகிநீ புலவரெலாம் புகழ்ஆதியின ஈசனும்நீ!
சாகாமேழும் நீ தடங்கமழ் தொண்டையாறும்நீ!
மோகனன்நீ நின்னடி மலர்பதமுணர வல்லோமல்ல வேலா!

- க. தெய்வேந்திரம்.

# அருளிலார்க்கு இல்லை நல்லுணர்வு

– திரு சு. சிவராசா அவர்கள் –

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட
மனிதரை நினைந்து விட்டால்"

என்று பாரதியார் தனது பாடலில் கவலைப் பட்டுக் கூறுகிறார்.

"....நெஞ்சம் புண்ணாகி நெடுந்தூரம் தான் நினைந்து,
துஞ்சுவதே மாந்தர் தொழில்"

என்று அங்கலாய்க்கிறார் ஔவைப்பிராட்டி.

"உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார்,
உறவு கலவாமை வேண்டும்"

என்று நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார் வள்ளல் பெருமான்.

"ஆசைப்படப்பட ஆய் வரும் துன்பம்,
ஆசை விடவிட ஆனந்தமாமே"

என்று அறுதியிடுகிறார் திருவள்ளுவர்.

"....தமக்கென முயலா நோன்றால்
பிறர்க்குரியார் உண்மையாலே"

என்பது இளம்பெருவழுதியின் புறப்பாடல்.

இந்த உலகத்தில் அறிவியலால் உறுதி செய்யப்பட முடியாத சில சங்கதிகள் இருக்கின்றன. உலகம் தோன்றிய அந்தநாள் முதல் இந்தநாள் வரை இறைவன் பற்றிய கோட்பாடுகள் சிலாகித்துப் பேசப்படுகின்றனவேயன்றி வாய்ப்பு பார்க்க முயன்று தோற்றுப் போனவரே பலராவர். "எடுத்த பொருளாலும் ஏதுக்களாலும் சோதிக்க வேண்டாம்..." என்பது சம்பந்தர் வாக்கு. இன்னும், "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்...." என்ற கூற்றையும் சம்பந்தர் வாக்கிற்கு உறுதிசேர்க்கும் வாக்கென்று கொள்ள முடியும்.

தமிழ் இலக்கணத்தில் பண்புப் பெயரால் சுட்டப்படுவனவற்றை உணர முடியுமேயன்றி உருக் கொடுக்க முடியாது. அஃதாவது கற்கண்டின் சுவையை வாயிற் போட்டு நாவினால் சுவைத்து உணர முடியுமேயன்றி இது இவ்வாறென்று சொற்களால் கூறமுடியாது. இதன்படி இறைவனை கற்கண்டின் சுவையாக அடியவர்கள் உணர்ந்துகொள்ள முடியும். "தேனே, அமுதே, தித்திக்கும் மானே...." என்று தாம் உணர்ந்த இறை அனுபூதியைச் சொல்லிச் சொல்லி உருகுவார் மாணிக்கவாசகர்.

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

முருகா உனது திருவருளினால் ஆசை ஆகிய விலங்கு உடைபட்டுப்போக எதுவும் பேசாது இருக்கின்ற அனுபூதி நிலை தனக்குக் கிட்டியது என்னும் அந்நிலை பேசாதிருத்தலே என்றும்,

சும்மா இரு சொல் அற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே"

என்றும் அருணகிரியார் கூறுவார்.

மேலும் இதுவே ஈடு இணையற்ற பேரானந்த நிலை என்றும் சொல்கிறார்.

சாத்திரம், தோத்திரம், மந்திரம் என்ற மூவகையாக சொல்லப்படுகின்ற பக்தி இலக்கியத்தில் திருமுறைகள் பன்னிரண்டும் வேதசாரமாய் உள்ளன என்று பெரியோர் கூறுவர். இதில் அப்பர் சுவாமிகளின் பாடல்களே தேவாரங்கள் என்று போற்றப்படுகின்றன. அவர் பரசமயமாகிய சமணத்தில் புகுந்து தருமசேனராக வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்தவர். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு அவனுடைய அருட்திறத்தை வியந்து போற்றும் தன்மை, "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்ற அடி அவரது இறை அனுபவத்தின் வெளிப்பாடான பாடல்கள் படிப்பவரை மெய்சிலிர்க்க வைக்கும். பதச்சோறாக ஒரு திருத்தாண்டகப் பாடல்.

தொண்டர்க்குந் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சூழ்நரகில் வீழாமே காப்பான் தன்னை
அண்டத்துக் கப்பாலைக் கப்பாலானை
ஆதிரைநாள் ஆதரித்த அம்மான் தன்னை
முண்டத்தின் முளைத்தெழுந்த தீயானானை
மூவுருவத் தோருருவாய் முதலாய் நின்ற
தண்டத்தில் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கினேனே.

இறைவன் நீக்கமற எங்கும் நிறைந்தவன் அடியாரின் அன்புக்கு ஆற்றாத எளியன், சர்வ வல்லவன் என்றெல்லாம் போற்றுகிறார். இறைவனைப் போற்றுகின்ற அடியவர்களின் தன்மைகளை எண்ணி வியந்து தெய்வச் சேக்கிழாரும் இவ்வாறு பதிவு செய்கிறார்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒப்பவே நோக்குவார்
கூடும் அன்பினாற் கும்பிடுதலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

இறைவனை வணங்கி இன்புறுதலே தமது செயலாக கொண்டவரே அடியவர் ஆவார். அவரின் செயல்கள் யாவும் தவமேயாகும். வேலை வணங்காது வேறென்ன வேலை, என்பதன் பொருளும் இதுவேயாகும்.

இவ்வாறு பக்குவான்மாக்கள் பதி உண்மையை உணர்ந்து பாசத் தொடர்புகளை ஒவ்வொன்றாகக் களைந்து இறை அநுபூதியில் மூழ்கி இருப்பவரே மெய்யடியாராவர். இப்படியான சிவனடியாரைக் கண்டால் அவரையும் சிவனாகவே வணங்க வேண்டும் என்று சிவஞானபோதம் உறுதிப்படுத்தி உரைக்கிறது.

"செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலம் கழீஇ அன்ரரோடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"

சைவசமய நெறியின்படி பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளும் அநாதியும் உண்மையும் ஆனவை. நல்வினை தீவினை இரண்டின் காரணங்களை ஆகாமியம், பிராரத்துவம், சஞ்சிதம் ஆகிய வினைத் தொடக்குகள் மூன்றும் பிறவிக்குக் காரணமாகின்றன. திருவருட் பேற்றினால் இரு வினையொப்பு நிலையில் மலபரிபாகம் ஏற்படுகிறது. அந்நிலையில் சத்திநிபாதம் கைவரப்பெற்று சற்குருவின் கருணையால் ஆட்கொள்ளப்படுவர். இவரே பேரின்ப வீடுபேற்றை அடையும் பக்குவநிலையைப் பெற்றவராவர்.

திருவருட்பேறு பற்றி பேசுவது பெரிய விடயப்பரப்பாகும். அதனால் கைவரப்பெறும் அநுபூதி நிலையே நாம் பிறவி எடுத்ததன் பயன் என்றும் சொல்லமுடியும். கற்றதனாலாய பயனும் பொருளும் இதுவே என்பது வள்ளுவரின் வாக்கும் ஆகும். இது இவ்வாறு இருக்க, உலகத்தார் வழிபடும் எல்லாக் கடவுளரும் ஒருவரேயாம் என்பதை உணர்த்துவதும் இந்நிலையேயாம். ஆனால் முன்வினைப் பயனும் அறியாமையும் சேரப் பெற்றவர் தத்தம் மதங்களிற் தட்டிழுக்குப் பட்டு தடுமாறுகின்றார் என்று வாதவூரர் பாடுகிறார்.

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தேணோக்க மாடாமோ

இதுவுமன்றி ஒரு சமய நெறியில் ஒழுகுபவர்கள் மற்றச் சமய நெறியாரைப் பார்த்து ஏளனம் பேசலாகாது. தமது மதமே மெய்யானது என்றும் தமது வழியில் சேர்பவரே மரணத்தின் பிந்திய வாழ்வில் நற்கதியைப் பெறுவர் என்பது பொருத்தமானதன்று. பொது இடங்களில் மேடைபோட்டு இறைவனை கூவி அழைத்து விட்டோம் என்று காட்டுவது பொறுத்தமற்றது அல்லவா? இத்தகைய மாறுபாடான செயல்கள் எமது கலை கலாச்சார விழுமியங்களுக்கும் குந்தகம் ஏற்படுத்துவதாய் இருப்பது வருந்தத்தக்கது. எல்லா மதங்களையும் தோற்றுவித்தவர்கள் தாம் வாழ்ந்த சூழல், மொழி, நாடு, இனம் முதலான காலதேச வர்த்தமானங்களை கருத்திற்கொண்டே உபதேசித்திருப்பதைக் காணலாம். எல்லா இடங்களிலும் இது நூறு சதவீதம் பொருந்தும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே அந்தந்த இடங்களுக்கு பொருத்தமான சமய நெறியில் காலகாலமாக நின்றவரை மாற்றுக் கருத்தூட்டல் செய்து புரள வைப்பது சரியான செய்கையும் ஆகாது. இது குடும்ப உறவுகளிடையே குழப்பங்களை உண்டு பண்ணுவதை இன்று கண்கூடாகக் காணமுடிகிறது.

நமது நாடும் யுத்த அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து அதன் பின்விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. எமது சமூக கட்டமைப்பு பல பிரிவுகளை அல்லது சாதிகளை உள்ளடக்கியதாய் இருக்கிறது. இதிலே பாதிக்கப்பட்டவர், நோயாளர், விதவைகள், பெண் தலைமைத்துவ குடும்பகாரர், சிறையில் வாடுவோர், ஆதரவற்ற சிறுவர்கள், ஊனமுற்றோர் முதலாய நலிவடைந்த பிரிவினரை இலக்கு வைத்து ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் சமய குழுமங்களினால் தீவிரமாக நடத்தப்படுகின்றது. இத்தகைய உபதேசிகளும் பிரச்சாரர்களும் பொருள் நலம் கருதியே செய்கிறார்கள் என்றும் பேசப்படுகிறது. பெறுமதிமிக்க காலத்தையும் மனித வளத்தையும் ஒத்துவராத விடயத்துக்காக வீணடித்துக் கொண்டிருப்பது அறியாமையே அன்றி வேறில்லை. நமது சைவநெறியின் பெருமையை உணர்ந்து வெளிநாட்டார் அதுபற்றி அறிவுபூர்வமான ஆய்வுகளை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

தண்டாமரையின் உடன் பிறந்தும்
தண்தேன் நுகரா மண்டூகம்
வண்டே கானத்து இடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லோர் நல்லோரை

ஆரம்பத்தில் சொன்ன அருளாளர் வாக்குகள் இவர்களைப் பற்றியே சொல்லியது போலும். ஆனாலும் பிறர் நலம்பேணும் நேர்மை உடையவராலேயே இவ்வுலகம் என்றும் ஒன்றுபோல் சுற்றுகிறது. இத்தகைய கடையருக்கும் கடைத்தேற்றம் தருவது சிவ நாம சங்கீர்த்தனமே என்று திருமூலர் அறிதி இடுகிறார்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

(திருமூலர்)

ஒன்றே குலம் என்று பாடுவோம்
ஒருவனே தேவன் என்று போற்றுவோம்

(கவியரசர்)

## காலமெல்லாம் நான் உன் அடிமை

பார்க்கும் இடமெல்லாம் நீ முருகா! – நான்
நினைக்கும் நினைப்பெல்லாம் நீ முருகா!
சந்நிதியில் உனைக்கண்டு எனை இழந்தேன் – முருகா
நீயும் என்னுயிர் பார்க்கவில்லையா.

பூக்கும் உன் முறுவல் எனை மயக்க – உன்
பன்னிரு விழிகளிலும் எனை அழைக்க
காந்தம் போல் உன்னை நான் நாட – என்னை
உன்பாதத்தில் ஏற்றுக்கொண்டாயோ என்முருகா.

பன்னிரு கரங்களுக்குள் நானிருக்க – உலகின்
பயமேதும் நானறியேன் என் முருகா
ஓமென்ற மந்திரத்தில் நீ அணைக்க – நான்
காலமெல்லாம் உன் அடிமை வேல் முருகா.

*-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-*

(தொடர்ச்சி...

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

– சுவாமி கிருஸ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## 8.7. கிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் இடையே நடந்த உரையாடல்

கீதை எல்லாவற்றுக்கும் மேலாக நாம் முன்பு குறிப்பிட்டுள்ளதைவிட சாதாரண கற்பனையினால் முடியாத, ஆச்சரியம்மிக்க, மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்றாகவும் அது இருக்கிறது. அது கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே நிகழ்ந்த ஓர் உரையாடலாக உள்ளது. "கிருஷ்ணார்ச்சுனசம்வாதம்" என்ற தொடரினால் அக்கருத்து ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் தரப்படுகிறது. பரிபூரணத்துவத்துக்கும் சார்புத் தன்மைக்கும் இடையேயுள்ள உறவை வெளிச்சம் போட்டுக் காட்டக் கொணரும் நிகழ்ச்சியாகவே கிருஷ்ணனும் அர்ச்சுனனும் கொள்ளப்படுகிறார்கள். அந்த இதிகாசம் தனக்கே உரிய ஒரு விசேட கலைத்துவ மாண்பையும், அழகையும் தன்னகத்தே வைத்திருக்கின்றது. அந்த மாண்பும், அழகுமே ஒரு நாடகத்தின் பெருமையாகும். அப்பெருமையை நீங்கள் அனுபவிக்கின்றீர்கள். அந்த அனுபவத்துக்குப் பின்னால் அது உங்களுக்குத் தருவதற்கான ஒரு படிப்பினையை அல்லது ஓர் ஒழுக்கத்தைப் போதனையாக வைத்துக்கொண்டுள்ளது. நாம் முன்னர் குறிப்பிட்டுள்ளது போல மகாபாரதத்தின் பாத்திரங்கள் மனித அம்சங்களில் நிரந்தரமாக என்றுமே இருக்கின்றன. அவ்வாறே கிருஷ்ணன் அர்ச்சுனன் என்ற பாத்திரங்களும் மனித வடிவில் என்றும் உள்ளனவே. பலநூறு ஆண்டுகளுக்கு முன் வரலாற்றிலே வாழ்ந்திருக்கக்கூடிய இரண்டு மனிதர்கள் மட்டுமன்றி அவர்கள் என்றும் உள்ள நிரந்தரமான உறவினர்கள் ஆவர். அது அந்த இதிகாசத்தில் சொல்லப்படும் ஒரு லௌகிக வரலாறு அன்று.

ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு சூழ்நிலையிலுமுள்ள எல்லாக் காலங்களுக்கு மான, அர்த்தமுள்ள பிரபஞ்சத்தில் நடித்துக் காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிரந்தர நாடகம் பற்றிய வரலாறே அக்கதை ஆகும். என்றும் உள்ள பரம்பொருளினால் என்றுமுள்ள தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்தச் செய்தி என்ற போதனையும் நிரந்தரம் ஆனதே ஆகும். எம்மிடத்திலே ஓர் அபூர்வமான அம்சம் உண்டு. அது அதன் இயல்பிலே என்றும் நிரந்தரமானது. அந்த நிரந்தரமானது எங்களுடைய பிரிக்க முடியாத தனித்துவமான தன்மை ஆகும். அத்தனித்துவமான தன்மை பரம்பொருளோடு ஒரு நிரந்தரமான உறவைக் கொண்டுள்ளது. எனவே அது ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அல்லது ஒரு உத்தேசமான சூழ்நிலைக்கு மட்டும் பொருத்தமான ஒரு மொழியினால் வழங்கப்பட்ட ஒரு செய்தியும் அன்று. ஆனால் மகாபாரதத்தின் அந்த விசேட நிகழ்ச்சி அந்த இதிகாச ஆசிரியரினால் ஓர் அத்தியாவசிய சந்தர்ப்பமாகவே தெரிந்து எடுக்கப்பட்டுள்ளது. என்றுமுள்ள

பரப்பிரம்மத்தோடு என்றும் உள்ள மனித இயல்பின் தொடர்பு பற்றிய அறிவை வழங்குவதற்காக அந்நிகழ்ச்சி அவரால் தெரிந்து எடுக்கப்பட்டது. இக்கதையின் இறுதி உச்சக்கட்டம் பரப்பிரம்மத்தோடு தனிமனிதன் இணைந்து கொள்ளும் ஒரு நிலையாகும். ஒரு பூரணத்துவத்தில் எல்லா உயிர்களோடும் எம்மை இணைத்துக் கொள்ளும் ஒரு நிலையே அது ஆகும். அதுவே கிருஷ்ணனோடு அர்ச்சுனன் இணைந்து கொள்ளும் ஒரு சூழ்நிலை அமைப்பு ஆகும்.

## 09. பிரம்மத்தை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கும் உலகம்

பிரபஞ்சத்தின் கதையே எந்த ஒரு நாட்டினது கதையும் ஆகும். எமது கதையும் அப்பிரபஞ்சத்தின் கதையே. அது படைப்பு முதல்வனின் எல்லாப் படைப்புக்களுக்குமான இயக்கத்தின் ஒரு கதையும் ஆகும். இந்தப் பரந்த பிரபஞ்சத் தோற்றப்பாடாக இங்கே உள்ளதும், எல்லா உயிர்களினதும் பிதாவாகிய அந்தப் பரம்பொருளே ஆகும். அந்தப் பரம்பொருளை நோக்கியே உலகம் நகர்ந்து கொண்டு இருக்கின்றது. அதுதான் படைப்பின் கதை ஆகும். இதுவே பரிணாமம் அல்லது கூர்ப்பு என அழைக்கப்படுகிறது. நாம் ஆசை என்று அழைப்பதும், உயிர் வாழ்வதற்கான விருப்பு ஆர்வம் என்று அழைப்பதும் இதுவே ஆகும். இந்த உலகில் மகிழ்ச்சியைத் தரக்கூடிய திருவருளின் ஆசியான பசி, தாகம் முதலான எல்லாத் தேவையாகவும் இருப்பதும் இதுவே ஆகும். அவற்றின் இயல்பு எவ்வாறு இருந்தபோதும் எமது தேவைகள் எல்லாம் தரப்பட்டுள்ள ஏதாவது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உள்ள பரிணாமச் சூழ்நிலையில் அந்தக் குறிப்பிட்ட இயல்பினால் தேவையாக்கப் பட்டிருக்கின்றன. அவ்வேளையோடு நாம் சம்பந்தப்பட்டு இருக்கின்றோம். அவ்வேளையில் நாம் ஒவ்வொருவரும் முற்றாகவே கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றோம்.

## 10. கீதைக்குள் ஆழமாகச் செல்லச் செல்லப் புதிய பரிமாணங்கள் தோன்றும்.

பகவத்கீதையின் போதனையினது மிகப் பரந்த எல்லாவற்றையும் அடக்கியுள்ள தன்மையை இந்த முகவுரையைக் கொண்டு ஒருவர் கற்பனை செய்து பார்க்க முடியும். இந்த நூல் எதனையும் சொல்லாமல் விடவில்லை. இந்தச் செய்தியை வழங்க இந்நூல் எடுத்துக்கொண்ட மொழியானது தனக்குப் பின்னால் ஓர் இரகசியத்தை வைத்திருக்கின்றது. இதற்கு நாம் எம்முள் ஆழமாகச் செல்லச் செல்ல அது கூறும் கருத்தையும் மேலும் மேலும் ஆழமாக நாம் கண்டு கொள்வோம். எமது புற ஆளுமையைக் கொண்டு மட்டும் இந்தக் கீதையை வாசிப்போமாயின் அதன் மேலெழுந்தவாரியான அம்சங்களை மட்டுமே காண்போம். நாம் ஒரு மொழியியலாளராக அல்லது வடமொழி வல்லுனராக அல்லது அறிவாளியாக அதனை வாசிப்போமாயின் எமது உணர்வுகளுக்கு அல்லது தருக்க நியாயத்துக்கு இணங்க அந்த அம்சத்தை மட்டுமே காண்போம். நாம் ஓர் உளவியலாளனைப்போல் அதனை வாசிப்போமாயின் மனித மனத்தின் புரிந்துகொள்ள முடியாத எத்தனையோ புதிர்களை அங்கே காண்போம். நாம் ஒரு பகுத்தறிவாளனாக அதனை வாசிப்போமாயின் பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றுக்கும் ஆதாரமான வாதப்பிரதி வாதங்களை அங்கே காண்போம். நாம் ஓர் ஆன்மிக ஆய்வாளனாக அதனை வாசிப்போமாயின் எங்களைப் பராமரிக்கும் ஒரு

தந்தையை அங்கே காண்போம். நாம் எமது நம்பிக்கையை இழந்து துன்பப்படும் கணங்களில் சூரிய ஒளியைக் காணவிடாது முகில்கள் நிறைந்து மூடியிருக்கின்ற வேளையில் எமது தாய் தந்தையரைப்போல அது ஆறுதலைத் தரும். பகவத்கீதை என அழைக்கப்படும் இந்த ஆன்மிக நூல் தரும் போதனை அப்படிப்பட்ட ஆழம் உடையது. பகவத்கீதை அமைந்துள்ள மகாபாரதம் என்ற இதிகாசம் மனித குலத்தின் எல்லாப் பாத்திரங்களையும் எடுத்து விளக்கிக் காட்டுகிறது. அது இந்தியப் பண்பாட்டை மட்டுமன்றி எல்லாத் தேசங் களையும், அவற்றின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களையும் எமக்குத் தெரியப்படுத்துகிறது.

**11. பகவத்கீதை போதனை செய்யப்பட்ட நோக்கம்:**

ஆன்மிகப் பண்புள்ளதாகக் கருதப்படும் இந்தத் தெய்விகச் செய்தி மிகவும் நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்திலேதான் வழங்கப்பட்டமையை அறியும்போது ஒருவர் ஆச்சரியப்படக்கூடும். அதுவும் ஒரு யுத்தகளத்தில் யுத்தம் ஆரம்பிக்க இருந்தவேளையில், ஒவ்வொருவரும் அடுத்த எதிர்த்தரப்பினரது தலையை வெட்டி வீழ்த்த ஆயுதங்களைத் தரித்திருந்த வேளையில், யுத்தகளத்தில் எல்லோருடைய மனங்களும் அதிகம் சூடேறியிருந்த ஒருவேளையில்தான் இந்தத் தெய்விகச் செய்தி வெளிப்படுத்தப்பட்டது. யுத்தம் என்றால் என்ன என்று நாம் அறிவோம். அப்படி ஒரு பயங்கரமான நிகழ்ச்சி நடக்கச் சற்று முன்னர்தான், என்று உள்ளதன் ஒரு செய்தி வழங்கப்படுவதற்கான நேரமாகத் தெரிந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு கல்லூரியில் அது போதிக்கப்படவில்லை. அப்படியான உயர்ந்த ஒரு போதனை ஒரு கோயில், அல்லது ஒரு திருச்சபை, அல்லது ஒரு கல்வி நிலையம் அல்லது ஒரு பல்கலைக்கழகம் அல்லது ஒரு ஆச்சிரமம்தான் வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என ஒருவர் எதிர்பார்க்கக் கூடும். உண்மையில் அப்படியான ஓர் இடம்தான் இப்படியான ஓர் உயர்ந்த செய்தியை வழங்குவதற்குப் பொருத்தமான இடமாகும். யுத்தம், சண்டை, போராட்டம், இரத்தக்களரி என்பவற்றோடு ஆன்மிகத்துக்கு எவ்வித உறவும் கிடையாது. மகாபாரதத்திலுள்ள பயங்கரமான யுத்தக் காட்சிகளுக்கும், இந்தச் செய்தியின் ஆச்சரியப்படத்தக்க என்றுமுள்ள பூரணத்துவத்துக்கும் உள்ள தொடர்பை ஒருவர் கற்பனை செய்யக்கூட முடியாது. ஆனால் பகவத்கீதையின் சிறப்பு அங்கேதான் இருக்கின்றது. எனவே இதனை மரபு ரீதியான அர்த்தத்திலும் ஓர் ஆன்மிக நூல் மட்டும்தான் என்று கருதப்படுவதற்கு இல்லை. ஒரு யுத்த களத்தில் ஓர் ஆன்மிக நூல் எழுகின்றது என்று நம்மால் எதிர்பார்க்க முடியாது. கடவுளைப் பற்றி அல்லது சமயத்தைப் பற்றி நாம் பேசும்போது ஒரு தூய மனப்பான்மையையே எடுத்துக் கொள்வோம். தூய்மையான தன்மை என்பதன்மூலம் தூய்மையில்லாத ஒரு சூழ்நிலையைவிட வேறொன்றையே நாம் கருதுவோம். ஒரு யுத்தம், ஒரு போர், ஒரு நினைக்க முடியாத சூழ்நிலை, ஒரு விரும்பத்தகாத சூழ்நிலை, ஒருவரை ஒருவர் கொல்லப் போகின்ற பயங்கரக் காட்சியுள்ள சூழ்நிலையைக் காட்டிலும் எதுதான் தூய்மையற்றதாக இருக்கமுடியும்? ஆனால் அப்படியான ஒரு சூழ்நிலைதான் மிகப் பொருத்தமான சந்தர்ப்பமாக இங்கே கருதப்பட்டுள்ளது.

(தொடரும்...

# நல்லூர் முருகன் பேரில் பாடப்பட்ட 12 அருட்துதிகள்

– திரு வே. தருமலிங்கம் அவர்கள் –

ஆதிமுதல்வனே கணபதியே
அனைத்து வினைகளையும் தீர்ப்பவனே
வேதமுதல்வனே விநாயகனே
விரும்பிய யாவும் அருள்பவனே
பூதபரம்பரைக்கு நாயகனே
புகலிடம் உன்பதம் அருள்வாயே
சோதிவடிவாய் வந்த முருகனுக்கு
அருட்துதி எனக்கருள வருவாயே

கணபதிக்கு இளையவனே கந்தையா
கணமேனும் கைவிடான் வேலையா
குணமென்னும் குன்றினிலே குமரையா
கோலமயில் கொண்டுநிற்பான் பாரய்யா
மனமென்ற மயிலினிலே ஆடய்யா
மட்டில்லா மகிழ்ச்சியிலே போடய்யா
சினமில்லாச் சிறந்தவழி தருமையா
சீர் நல்லூர் நற்பதியிலே தங்கய்யா. 01

வேல்கொண்டு அன்பர்களைக் காரய்யா
வினைதீர்த்து அவர்துன்பம் தீரய்யா
மால்அறியாத் தேவன்சுதன் நீரய்யா
மலரடியே தஞ்சமென தீரய்யா
பால்வடியும் முகத்தவனாய் வருபவனே
பட்சம் வைத்தெமக்கெல்லாம் தருபவனே
நீலமயில் ஏறிநிதம் திரிபவனே
சீர் நல்லூர் நற்பதிக்கு உரியவனே. 02

சூரனைத் துண்டாடிய சுப்ரமண்யா
துயரில்லா வாழ்வுதரும் வேலய்யா
ஆரினி எமக்குத்துணை அழகய்யா
அன்றாடம் எமைக்காத்து அருளையா

சூரியனாய் எம்மனதில் திரிபவனே
சூக்குமமாய் எமக்கெல்லாம் தெரிபவனே
பாரினிலே பக்தர்துணை இருப்பவனே
சீர் நல்லூர் நற்பதியில் தரிப்பவனே. 03

தேரினிலே ஏறிவரும் வேலவனே
தேவாதி தேவர்க்கெல்லாம் ஆலவனே
பாரினிலே பக்தர்வினை தீர்ப்பவனே
பரமானந்தக் கண்கொண்டு பார்ப்பவனே
பகலவனாய் எம்மனதில் திகழ்பவனே
துயர்போக்கி எம்வாழ்வில் மகிழ்பவனே
காரிகையர் இருவர்நடு இருப்பவனே
சீர் நல்லூர் நற்பதியில் தரிப்பவனே. 04

வண்ணமயில் ஏறிவரும் வடிவழகா
வரம்தந்து எமைக்காக்கும் முடியழகா
திண்ணமாக எமக்கருள வந்திடுவாய்
தீராத நோயெல்லாம் தீர்த்திடுவாய்
புண்ணியனே பூம்பாதம் தந்திடுவாய்
புதுமை மிகு தேரினிலே வந்திடுவாய்
பண்ணமைந்த பாவினிலே இருப்பவனே
பார் நல்லூர் நற்பதியில் இருப்பவனே. 05

வள்ளிதேவயானைக் குகந்தவனே
வாழ்விலே என்னிதயம் புகுந்தவனே
புள்ளிமயில் ஏறிவரும் பெருமானே
பேருளை நீ எனக்குத் தருவாயே
புள்ளையாக அம்பிகைக்கு வந்தாயே
புனிதமனம் நீ எனக்கு தந்தாயே
அள்ள அள்ளக் குறையாத அன்பினொடு
ஆடியில் திருவிழாக் கொண்டாயே. 06

மாலோன் மருகனே முருகையா என்
மனதில் இருக்கும் கந்தையா
வேலோன் வெற்பனே அழகய்யா
வேண்டுவார் தமக்கு அருளையா

ஆலம் உண்டோன் மகனய்யா
அம்பிகை சுதனாய் வருமையா
சீலம் காக்கும் செல்லையா
சீர் நல்லூர் நற்பதியில் தங்கய்யா. 07

ஆடிவேல் சூடிவரும் கந்தனே
அன்பர்களை நாடிவரும் காந்தனே
கோடிவினை வாடஓட்டும் சாந்தனே
ஓடிவாரும் என்னிதய வேந்தனே
பாடிப்பாடி ஆடிடுவேன் சுந்தரனே
பட்சம்வைத் தெமையாளும் சேந்தனே
தேடித்தேடி உனைப் பணிந்தேன் பாந்தனே
உயர் நல்லூர் நற்பதிக்குச் சொந்தனே. 08

ஆலமுண்டோன் திருமகனே ஐயாவுந்தன்
ஆறுதலை வேண்டிநின்றேன் அருள்வாய் என்றும்
கோலமயில் ஏறிவரும் பரமன் பாலா
குணம் கடந்த கோலமாய் வருவாய் என்னுள்
சோலையொடு ஆறுபடை வீடு கொண்டாய்
சின்மயனே சிவக்கனலே ஆள்வாய் என்னை
வேல்கொண்ட மால்மருகா என்றும் காப்பாய்
வினை போக்கும் நல்லூரில் நிற்பாய் என்றும். 09

காலமெல்லாம் உன் நினைவே
எம்மைக் காக்கும்
கோலமயில் ஏறிவரும் குருபரனே
கொற்றவனே வெற்றிதரும் வேலைக் கொண்டாய்
காலமெல்லாம் நும் பணியில்
எம்மை யாக்கி தினம்
சீலமிகு பக்தர் தொழும் நல்லூரின்
சிவபாலா நின்பாதம் போற்றி போற்றி. 10

நல்லூரான் திருவடியைத் தலையில் வையடா
நாளெல்லாம் அவ்னடியை மனதில் வையடா
சொல்லெல்லாம் அவனடியைத் துதித்து நில்லடா - அவன்
சூட்சுமத்தில் உன்மனதைப் பதித்து நில்லடா

கல்லான உன்மனதைக் கரைத்து நில்லடா
காலமெல்லா அவனடியே தஞ்சம் அல்லவா
பொல்லாத குணமெல்லாம் போக்கும் அல்லவா
பெருமான் நல்லூரான் பொன்னடி அல்லவா. 11

ஆறுதலை எனக்குக் காட்டும் அடி
அஞ்சாத வாழ்வெனக்குக் கூட்டும் அடி
தேறுதலை எனக்குத் தேட்டம் அடி
தீராத சங்கடங்கள் தீர்க்கும் அடி
மாறாக வரும்துன்பம் போக்கும் அடி
மட்டில்லா மகிழ்ச்சியிலே கூட்டும் அடி
போரான நம்வாழ்வைத் திருத்தும் அடி
புண்ணியன் நல்லூரான் திருவடியே. 12

-சுபம்-

## ஆன்மீகச் சிந்தனைகள்

* இறைவனை ஏதேனும் ஒருவிதத்தில் நினைப்பதன்மூலம் மனதை எப்போதும் உயர்ந்த நிலையில் வைத்திருப்பதுதான் ஆன்மிக சாதனை என்று சொல்லப்படுகின்றது. இறைவனை நாம் பல வழிகளில் அல்லது பல முறைகளில் அடையலாம். அதில் பிரார்த்தனையும் ஒன்று ஆகும். உள்ளத் தூய்மை பெறுவதற்குப் பிரார்த்தனை என்பது மிகவும் சுலபமான, சிறப்பான உபாயமாகும். ஜபம், தியானம், நாம சங்கீர்த்தனம், இறைவனை வணங்குதல், தோத்திரங்களைப் பாடுதல், பூஜை போன்றவையும் பிரார்த்தனையில் அடங்கியுள்ளன. ஆன்மிகத்துறையில் முன்னேற ஒருவன் எப்பொழுதும் இறைவனை நினைத்துக் கொண்டே இருக்கவேண்டும். கடவுளின் கிருபை கிட்டவில்லை, ஆன்மிகப் பாதையில் முன்னேற்றம் இல்லை என்று சிலர் வெறுப்புக் கொள்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களின் தீய செயல்களே. அவையே அவர்களின் முன்னேற்றத்திற்குக் குறுக்கே நிற்கின்றன. ஆகவே தீயசெயல்கள் செய்யாதிருக்க வேண்டும்.

* இறைவனை வழிபடுவதற்கு புறத்தூய்மை மிகவும் வேண்டியது. பூஜை, ஜபம், தியானம் ஆகியவற்றில் ஈடுபடும்போது புறத்தூய்மையாக இருக்கவேண்டும். ஆனால் புறத்தூய்மை மட்டும் இறைவனை அடைய போதுமானதல்ல. அகத்தூய்மை முற்றிலும் வேண்டும். நம் உள்ளத்திலுள்ள ஆசைகளும், அழுக்குகளும் நீங்கியவுடன் இறைவன் நம் உள்ளத்தில் குடிகொண்டு ஆட்கொண்டு அருள்புரிவான். மனம் அடங்கியவனுக்குத் தான், மனம் தூய்மையாக இருப்பவனுக்குத்தான், யோகம் சித்திக்கும் என்பதே முடிவான உண்மை. உடலை நீரால் தூய்மை செய்வது புறத்தூய்மை. வாய்மையாலும் மற்ற நற்குணங்களாலும் மனத்தை தூய்மைப்படுத்துவது அகத்தூய்மை. இரண்டு தூய்மையும் அவசியமாகும். அகத்தூய்மை மிகவும் இன்றியமையாதது.

# ஸ்ரீ கருட புராணம்

(தொடர்ச்சி...



-திரு இரா. செல்வவடிவேல்

கடவுள் நிலைக்குமாறான புராணங்களும், மாறாகாத சில பழம் புராணங்களும் காணப்படுகின்றன. புராணங்கள் வடமொழியில் எழுதப்பெற்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கும் நூல்களே பெரும்பாலானவையாகும். இம்மொழிபெயர்ப்புகளில் கடவுளின் உண்மையை அறியமுடியாதபடி மக்களின் அறிவைத் தடை செய்து, அவர்களை அறியாமைப் படுகுழியில் ஆழ்த்தி, அவர்கள் ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவி வாழாமல் தம்முள்ளே இடைவிடாது சண்டைகளை உருவாக்கி துன்ப வாழ்க்கையில் வாழச் செய்வானாய் இருக்கின்றன. புராணங்களுட் பெரும்பாலானவை இத்தகைய தீயதன்மையுடையவையாயினும், ஏனைய சில பழம் புராணங்கள் கடவுள் உண்மையை நுண்ணறிவு அற்றவர்களுக்கு விளக்கும் பொருட்டு அறிவுடையவரால் கட்டப்பட்ட நல்ல கதைகளை உள்ளடக்கியவையாக வும் இருக்கின்றன. இச் சிறந்த பழம் புராணங்கள் சிலவற்றின் நல்ல கதைகளையும், பின்வந்த தீய அறிவினர் தத்தம் தீய கருத்துக்களுக்கு வேண்டியபடியெல்லாம் மாற்றி, அவற்றின் உயர்ந்த நோக்கங்களையும் பாழ்படுத்தி விட்டனர். இப்போது வழங்கும் புராணங் களெல்லாம் பழைய சில புராணங்களின் உயர்ந்த கருத்துக்களைத் திரிபு செய்தவைகளும், அவற்றுக்கு மாறாய் எழுந்தவைகளும், அவற்றின் உண்மை நோக்கத்தைப் பாழ்படுத்த முன்வந்தவைகளுமேயாகும். இப்புராணப் பெருங்குப்பைக் குவியல்களிற் பழம்புராண உண்மைக் கருத்துக்களாகிய விழுமிய மணிகள் சிற்சில புதைந்து கிடக்கின்றன. இப் பெருங் குப்பையைக் கிளறி, அம் மணிகளைப் பொறுக்கி எடுத்தல் என்பது உண்மை அறிவு நூலாராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கே முடிந்த காரியமாகும். ஏனையோருக்கு எளிதில்

முடியாது. இவர்கள் சைவரென்றும் வைணவரென்றும் வேதாந்திகளென்றும் சாக்கியர், கௌமாரர், காணபத்தியர் என்றும் பல்வேறு பிரிவினராகிப் பல்வேறு கொள்கையினராகி ஒருவரோடொருவர் பெரிதும் மாறுபட்டுத் தத்தமக்கு ஏற்ற புராணங்களைக் கணக்கில்லாமற் பெருக்கி எழுதியிருக்கின்றனர்.

இவ்வாறு அச்சமயப் பிரிவினர் தாந்தாம் சார்ந்து கொண்ட வழிபடும் கடவுளர்களை உயர்த்தும் பொருட்டு பழம் புராணங்களில் எல்லாமவல்ல முழுமுதற் கடவுள்மேல் வைத்து எழுதப்பட்ட கதைகளைத் தமக்கேற்றபடியெல்லாந் திரித்தும் முன்பு இல்லாதவைகளைப் புதிதாகப் புகுத்தியும், முன்னுள்ளவைகளுக்கும் மாறான கருத்துக்களைச் சேர்த்தும் முன்புள்ள இறைவனின் இயல்புகளை முற்றும் இழிவு படுத்தியும் எழுதினார்கள். இப்பொல்லாத புரட்டுக்களினால் முன்னுள்ள பழம் புராணங்களின் நற்பெருங் கதைகளையும் வேறு பிரித்துக் காணும் பகுத்தறிவும் ஆராய்ச்சியுமின்றி, முன்னுள்ள சிறந்த கதைகளையும் பின்வந்த புரட்டுக் கதைகளையும் பின்வந்தோர் ஒன்று சேர்த்து எல்லாவற்றையும் ஒரே வகையாக வைத்துப் பாராட்டப் புகுந்தமையாற் புராணங்கள் எனும் பெயருக்கே புரட்டுக்கள், புழுகு மூட்டைகள் என்று பெயர் வந்துவிட்டது. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் கடவுளைப் பற்றிய எல்லாக் கதைகளையும் பொய்யென்று இகழ்ந்து கூறுபவர்களும் ஆராய்ச்சி உணர்வின்றிப் பின்வந்த புரட்டுக் கதைகளை அடியொட்டி முன்பிருந்த கதைகளையும் இழித்துப் பேசி விடுகின்றனர். இவ்வாறாகக், குருட்டு நம்பிக்கையுடையார் எல்லாக் கதை களையும் வரைதுறையின்றிக் கொண்டாடும் தன்மையும் காணப்படுகிறது. பொதுமக்களின் நன்மையையும் முன்னேற்றத்தையுங் கருதும் நல்லறிஞர்கள் அக்கதைகளை நன்கு ஆராய்ந்து பார்த்து ஏற்கக் கூடியவற்றை ஏற்றும், நிராகரிக்க வேண்டியவற்றை நிராகரித்தும் பொது மக்களுக்கு நன்மை தரக்கூடியவற்றை மட்டும் எடுத்துக் கூறுவது காலத்தின் கட்டாயமாகும் எனக் கருதுகிறேன்.

மேற்குறிப்பிட்ட கருத்தினடிப்படையிலேயே ஸ்ரீ கருடபுராணத்தை என்னுடைய நோக்கில் சில விடயங்களை நீக்கியும், மாற்றியும், நிராகரித்தும், சுருக்கியும் எழுதியுள்ளேன். ஆர்வமுடையவர்கள் உண்மையான மூலத்தைப் படிக்க முயலுவார்கள் என நம்புகிறேன். இளம் சமூகத்தினருக்கும் நடுத்தர மக்களுக்கும் தேவையானவற்றை அடியேனின் சுருக்கம் தாங்கியுள்ளது. புராணங்களை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறியும், எழுதியும் பேசியும் வருபவர்கள் எனது கருத்துக்களை மறுத்துக் கருத்துத் தெரிவிப்பதனால் இவ்விளக்கம் எழுதவேண்டியதாயிற்று.

மூலமாகவுள்ள புராணங்கள் (பழம் புராணங்கள்) முழுமுதற் கடவுளைப் பற்றிக் கூறும் கருத்துக்களை, முழுமுதற் கடவுளுக்கு “சிவன்” எனப் பெயரிட்டு பண்டைச் சான்றோர்கள். அவ் இறைவன் உயிர்களுக்கு உதவியாகச் செய்துவருஞ் செயற்கருஞ் செயல்களை சாதாரண மக்களுக்கு உணர்த்தும் பொருட்டாகவே அவற்றைக் கதைகளாக அமைத்து வைத்தனர். ஏனெனில், கற்றவர்முதல் கல்லாதவர்கள் வரை எத்திறத்தவர்க்கும் கதைகள் கேட்பதில் மிகுந்த ஆவல் இருக்கக் காண்கிறோம். எல்லாத் தேசத்து மக்களும் கதைகளைக் கேட்டு மகிழ்வதிலும் அக்கதைகளைத் தொடர்ந்து செய்யுள் வடிவில் எழுதிப் பயின்று மகிழ்வதிலும் மிகுந்த விருப்பமுடையவராகவும் இருந்துள்ளனர்.

இவ்வாறு கதைகள் கற்பதில் ஆர்வமுடையராயிருக்கும் மக்களின் மன இயற்கையை நன்கு உணர்ந்து பார்த்தே பௌத்த சமயத்தைப் பரப்பிய ஆசிரியர்கள் "ஜாதக கதைகள்" என்னுங் கதைத் தொகுதியினையும் உண்டாக்கினார்கள். கிறிஸ்துவ மதத்தை நிறுவிய ஏசு கிறிஸ்து என்னும் ஆசிரியரும் தாம் அறிவுறுத்துவதற்கு எடுத்துக்கொண்ட அரியபெரிய உண்மைகளைச் சிறுசிறு கதைகளிலமைத்து அவை தம்மை மக்களுக்குக் கூறினார். இங்ஙனமே ஒவ்வொரு சமய ஆசிரியருந் தாந்தாம் அறிவுறுத்தும் உண்மைகளில் மக்கள் உள்ளமானது பதிந்து நிற்றற்பொருட்டு, அவை தம்மை எல்லாரும் எளிதில் உணரத்தக்க இனிய கதைகளில் அமைத்து அறிவுறுத்தி வந்திருக்கின்றனர். ஆகவே மக்களின் இம் மனவியற்கையினை நன்கு ஆராய்ந்துணர்ந்தவர்களான சைவ சமயச் சான்றோர்களுக்குத் தாம் அறிவுறுத்தற்கு எடுத்துக்கொண்ட இறைவனருள் நிகழ்ச்சிகளையும் அரும் பேருண்மை களையும் உயர்ந்த பல கதைகளில் வாயிலாகவே அமைத்து மக்களுக்கு உணர்த்தினர். மக்கள் உள்ளத்தில் இம்மை மறுமை வாழ்க்கையின் உண்மைகளை எளிதிலே பதியவைத் தற்குக் கதைகள் பெரிதும் பயன்படுவன என்பது பிறர்நலங் கருதும் அறிஞர்கள் கருத்திற் பதிதல் வேண்டும்.

இன்று ஒரு பகுதியினர் கதைகளெல்லாம் பொய்யும் புளுகும் புனைந்து கட்டிச் சொல்லப்படுவதனால் இக் கதைகளை மக்கள் மத்தியில் பேசக்கூடாது என்று கூறியும் பேசியும் வருகின்றனர். சீர்த்திருத்தக்காரர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டவர்கள் கதைகளை நெருப்பிலிட்டுக் கொளுத்தியும், இறைவனின் சிலைகளை உடைத்த வரலாறும் முன்னைய கதைகளாகும். அந்த நாத்திகவாதம் தோற்றது யாவரும் அறிந்தது. இப்போது மீண்டும் முளைக்கும் "சீர்திருத்த வாதிகள்" கதைகள் உருவாக்கப்பட்டதன் நோக்கை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். இன்றைய இளைஞர்களின் கலாசாரப் பண்பாட்டுச் சீரழிவுகள் உச்சநிலையை அடைந்துள்ள இக்காலகட்டத்தில் ஆன்மீகக் கருத்துக்கள் இளைஞர்களுக்கு புதுவடிவில் புகுத்தப்படல் வேண்டும். நமது கதைகளின் மூலப் பொருளைக் கருத்தில் கொண்டு ஏற்றமாற்றங்களுடன் கதைகளை மீளக் கொண்டுவர வேண்டும். இக்கருத்தின் அடிப்படையில் ஸ்ரீ கருடபுராணக் கதைகளை எனது கருத்துப்படி புதுக்கியுள்ளேன். குறை நீக்கி நிறைகாணும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்றும்)

## அரோகரா என்பது

அரோகரா என்பது ஹரஹர என்னும் சமஸ்கிருதச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். ஹர என்பது சிவனின் நாமம். முதன்முதலில் மஹா கைலாசத்தில் பார்வதிக்கும் பரமேஸ் வரனுக்கும் நடந்த திருக்கலியாணத்தின் நிறைவில் மஹா விஷ்ணு வானவர் ஹரஹர நம பார்வதி பதயே என்று கோஷம் எழுப்ப அங்கு குழுமியிருந்த தேவர்கள் அனைவரும் பதிலுக்கு ஹர ஹர மஹாதேவா என்று கோஷமிட்டனர். இந்த வரலாறு ஸ்கந்தபுராணத்தில் உள்ளது.

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம் அன்பு வாசகர்களே! அங்கே எந்தவிதமான ஆகம விதிகளுக்குட்பட்ட பூசைகளோ கிரியைகளோ ஏன் சிவாச்சாரியார்களோ இல்லாத நிலையில் மாற்று மதத்தினர் எம் மதத்தின் சிவனை முற்றுமுழுதாக நம்பி பொங்கலிட்டு நேர்த்தி நிறைவேற்றிக் கொண்டிருக் கிற காட்சியைக் கண்டோம். அதுமட்டுமல்ல ஏற்கனவே இப்படியான பொங்கல் பூசையின் தவப்பயனால் மகவொன்றைப் பெற்றெடுத்த தாயொருவர் அந்த மக்கள் கூட்டத்தோடு நின்று பொங்குகின்ற காட்சியையும் கண்டோம். அத்துடன் அயற்கிராமங்களிலிருந்து மகவு வேண்டி நம்பிக்கையோடு வந்து பொங்குகின்ற மாற்று மதத்தினர் தொடர்ந்து வந்து பொங்கலிடுகிறார்கள் என்ற செய்திக்குச் சான்றாக இக்காட்சிகள் அமைவதையும் கண்டோம். ஆக மொத்தத்தில் ஆறாம் ஏழாம் நூற்றாண்டுக் காட்சிகளைப் போல சமகாலத் திருவருளின் சான்றுகளாக, காட்சிகளாக சந்நிதியானின் ஞானச்சுடர் வாசகர்களுக்கு காட்டி நிற்கும் ஓர் ஆவணமாகின்றது.

உண்மையில் கண்டோம் கதிர்காமத் தொடர் இப்படியாக விரிவுபடும் என்று சிறியேன் கனவிலும் நினைக்கவில்லை. முருகனின் திருவருளும் அன்பு வாசகர்களின் ஆர்வமும் விமர்சனமும் சிறியேனை நான் அனுபவித்த காட்சிகளைக் காட்ட உந்துதலாக இருக்கின்றது தான் உண்மை. சில அன்பர்கள் கேட்கிறார்கள் எங்கள் ஆலயங்களைப் பற்றியும் ஏன் நீங்கள் எழுதக்கூடாது என்று?

அருள் ஊட்டலின்றி அடியேனால் அசையவே முடியாது. ஆக இவர்களின் நடத்தை காசி, கையிலாயத்திற்கு எமது பெரும் பக்தர்கள் செல்வதுபோல மகப்பேற்றை வேண்டி நிற்போர் வழிபடும் ஓர் தலமாக இப்பழைய பொலநறுவைச் சிவன்கோயில் அமைந்துள்ளது. இதனைக் குறிப்பாக இச் சிங்களச் சகோதரர்களுடாக எமக்கு "இக் கண்டோம் கதிர்காமம்" காட்டி நிற்கின்றது.

அதுமட்டுமல்ல எம்மோடு அளவளாவிய ஒரு இந்தியத் திருத்தல யாத்திரிகரின் கூற்றையும் உங்களுடன் பகிர்ந்துகொண்டு எங்கள் ஆலயங்களின் சிறப்புக்களைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன். இந்தியாவில் குறிப்பிட்ட பெரிய தலங்களிற்கு ஆயிரம் ஆயிரம் அடியவர்கள் கூடுகிறார்களாம். ஆயிரம் இரண்டாயிரம் வரை காசு கட்டினால் கர்ப்பக்கிரகம் வரை கூட்டிச் சென்று தரிசிப்பு, இல்லாதவன் கடைசி வாசலில் நின்று பார்த்தே வரவேண்டிய பணப்பறிப்பு நிலை பரவலாகக் காணப்படுகிறதாம். அத்துடன் வீதிகள், சாலைகள் மிகவும் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்றனவாம். சிறியேன் சென்றதுமில்லை பார்த்ததுமில்லை. உண்மை யில் இப்பொலநறுவையை அரசு புனித நகராகப் பிரகடனப்படுத்தியுள்ள அதேவேளை வானளாவும் மரங்கள் புற்றரைகள் எங்கும் பரந்து விரிந்து ஓடும் நீர்நிலைகள் காணப்பட்ட பொழுதிலும் மிகவும் துப்பரவாக நேர்த்தியாகச் சூழல் பராமரிக்கப்பட்டு வருவதையும் நாம் கண்ட காட்சிகளாக இங்கு விரிகின்றன.

அதுமட்டுமல்ல அங்குள்ள கல்வெட்டில் மூன்று பாசைகளிலும், இப்பழைய கோயில் ராஜராச அரசனால் (கி.பி. 985-1014) கட்டப்பட்டதென்றும் ஒரு அரசியின் பெயராகிய வானவன் மாதேவியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றவாறு ஓர் பதிவும் காணப்பட்டு இதன் தொன்மையை உணர்த்துவதுடன் அக்காலச் சிற்பிகளின் (உடைந்து நிற்கும் சிலைகள்) கைவண்ணத்தையும் இங்குள்ள எச்சங்களூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

உடைந்த கோவில் வழிபாட்டிற்கு உதவாது என்ற தத்துவத்திற்கு மேலாக சந்நிதியானின் எவ்விதிக்கும் கட்டுப்படா வழிபாட்டு முறையினைப்போன்றே ஓர் வழிபாடும் இங்கு நடைபெறுவதனையும் அதனூடாகத் திருவருள் பெற்றுப் பயன் அடைகின்ற ஓர் உயிர்த் துடிப்புள்ள அடியார் கூட்டத்தினராகிய சிங்களச் சகோதரர்களுள் நாங்களும் ஒருவராகி மு.ப. 11.30 மணியளவில் எமது பயணத்தைத் தொடங்கினோம்.

மன்னம்பிட்டி சமன்பிட்டி அன்னை ஸ்ரீ சாரதா அறநெறிப் பள்ளியின் ஆசிரியர் மாணவர் பெற்றோர் சகிதமாக அங்கே எம் வரவிற்காகக் காத்திருந்தனர். அவர்களது அற நெறிப் பாடசாலைக் கட்டிட வேலைகள் தொடர்ந்த வண்ணமுள்ளது. ஆச்சிரமத்தால் அனுப்பப்பட்ட கூரைத் தகடுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

மாணவர்களுடன் கலந்துரையாடி எம்முடன் வந்திருந்த “சைவமகா சபையினர்” சிவதொண்டர் என்ற அமைப்பை அங்குரார்ப்பணம் செய்ததுடன், சிவதீட்சை, ஆலய வழிபாடு சமய சமூகப் பணிகள் என்பவற்றில் இவ்வமைப்பினர் எவ்வாறு பங்காற்றலாம் என்பது பற்றி விளக்கினர்.

தொடர்ந்து ஆச்சிரம சுவாமிகள் ஆசிரியர்களுக்கான மாதாந்த ஊக்குவிப் பணத்தை வழங்கியதுடன் வலய மாகாண மட்ட தேசியமட்டத்தில் விருதுபெற்ற இவ் அறநெறிப் பாட சாலைப் பிள்ளைகளுக்கான சான்றிதழ்களை அப்பிள்ளைகளுக்கு வழங்கிக் கௌரவித்தார். அவர்களுடைய வழமையான அன்பான உபசரிப்பின் பின் எமது பயணம் தொடர்கிறது. பிற்பகல் 4.30 மணியளவில் அம்பாறை மாவட்டத்திலுள்ள கோமாரிக்குச் சென்று அடைந்தோம். அங்கே அப்பகுதியிலுள்ள மூன்று கிராமங்களைச் சேர்ந்த பெருமளவு அறநெறிப் பாடசாலைச் சிறார்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் எமக்காக நீண்டநேரம் காத்திருந்தனர். முதலில் அவர்களுக்கு எமது தாமதமான வருகைக்கு வருத்தத்தை தெரிவித்து அவர்களுக்கான சீருடை விநியோகத்தை ஆரம்பித்தோம். இவர்களுக்காக 750 மீற்றர் பெண் பிள்ளைச் சீருடைத் துணிகளும் 500 மீற்றர் ஆண்பிள்ளைகளுக்குரிய சீருடைத் துணிகளும் வழங் கப்பட்டன. இவை அனைத்தும் துணிறோல்களாகவே குறித்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர் களிடம் சுவாமிகளால் வழங்கப்பட்டன. இவர்களுக்குரிய சீருடைகளைப் பொருத்தமாக தையல்காரர் ஊடாகத் தைத்துக்கொள்ளுமாறும் இதற்குரிய செலவு எம்மால் அனுப்பி வைக்கப்படும் என்றும் சுவாமிகள் கூறியதுடன் அவர்கள் அனைவரும் சுவாமிகளிடம் ஆசியும் பெற்றனர். அவர்களது மாலைநேரத் தேனீர் உபசரிப்புடன் எமது பயணம் பதுளையை நோக்கித் தொடர்ந்தது. இரவு 11.00 மணியளவில் பதுளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலை அடைந்து அங்கு.....

(காட்சி தொடரும்...

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருவீழிமிழலை

– வல்வையூர் அப்பாண்ணா –

* தேவார மும்மூர்த்திகள் மூவராலும் பாடப்பட்ட ஸ்தலம்
* அருணகிரிநாதரின் திருப்புகழிலும், சேந்தனாரின் திருவிசைப்பாவிலும் பாடப்பட்ட திருத்தலம்.
* அடியார்களதும் - ஊர் மக்களதும் வறுமைபோக்க இறைவனிடமிருந்து அப்பரும்- சம்பந்தரும் படிக்காசு பெற்ற இடம்.
* திருமால் தன் கண்களில் ஒன்றை அர்ச்சித்து இறைவனிடமிருந்து சக்கரம் பெற்ற வரலாறு நிகழ்ந்த இடம்.

சோழநாட்டின் தென்கரைத் தலமான திருவீழிமிழலை மயிலாடுதுறை - திருவாரூர்ப் பாதையில், பூந்தோட்டம் ரயில் நிலையத்திலிருந்து 10 கி.மீ தூரத்தில் உள்ளது. திருவாரூர், கும்பகோணம், பேரளம், ஆடுதுறை, பூந்தோட்டம் ஆகிய இடங்களிலிருந்த பேருந்து வசதிகள் உள்ளன.

இறைவன்: வீழியழகீசர், வீழிநாதசுவாமி

இறைவி : சுந்தரகுஜாம்பிகை

தலமரம் : வீழிச்செடி

தலத்தீர்த்தம்: விஷ்ணு தீர்த்தம்

காவேரிக் கிளை ஆற்றின் இக்கரையிலிருந்து பாலந்தாண்டி அக்கரைக்கு நாம் சென்றால் - கோவில் தென்புற வீதியின் நடுப்பகுதியைச் சென்றடைகிறோம். அகன்ற வீதி தெற்கு மதிற்சுவர் அருகாக (இடஞ்சுழியாக வரிசையாக நிற்கின்ற மருதமரங்கள் தாண்டி- கோவிலின் ராஜகோபுரம் வரை செல்கிறது. உயர்ந்த மதிற்சுவரின் மேல் விளிம்பில் - சுதை நந்திகள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. கிழக்குப் பார்த்த ராஜ கோபுரம் முன்பாக- கோவிலின் தெற்கு வடக்கான அகலம் எதுவோ அவ்வளவு பரப்பளவு உள்ள மிகப்பெரிய குளத்தின் நாற்புறமும் உள்ள நீராடு துறையில் பெண்கள் பலர் நீராடிக் கொண்டிருந்தனர்.

ராஜகோபுரம் தாண்டி நீண்ட பாதை வழியாக மேற்கு நோக்கி நடந்துவர நமது வலது கைப்புறமாக முதலில் வருவது மிகப்பெரிய **"வௌவால் மண்டபம்"** நடுவே தூண்கள் எதுவுமில்லாமல் - பார்ப்பதற்கு வௌவால் செட்டை விரித்திருப்பது போன்று குவிந்த நிலையில் இந்த மண்டபத்தை அழகுற அமைத்துள்ளார்கள். இங்கேதான் இறைவன்- இறைவி திருக்கல்யாண நிகழ்வு ஆண்டுதோறும் நடைபெறுகிறது.

"வௌவால் மண்டபம்" தாண்டிவர இரண்டாம் கோபுர வாசலை அண்மிக்கிறோம். கோபுர வாசலின் வலதுபுறம் இரட்டை விநாயகரும், இடது புறம் சுப்பிரமணியரும் உள்ளனர்.

திருவீழிமிழலையின் வடக்கு வீதியின் கிழக்குக் கோடியில் சம்பந்தரும், மேற்குக் கோடியில் அப்பரும் தத்தமது அடியார்களுடன் தங்கியிருந்த நாளில் மழைவளம் சுருங்கிப்

பொய்த்து, காவேரி தரும் நீரின் அளவு குன்றி, விளையத்தக்க உணவுப் பொருட்கள் குறைந்ததால் அடியார்களும் - ஊர் மக்களும் வறுமையில் வாட இருவரும் பெருந்துயருற்றனர். இருவரதும் துயர் நீக்கத் திருவுளம் கொண்ட இறைவன் கிழக்கு வாசல் தம்பமருகே உள்ள பீடத்தில் சம்பந்தருக்கும், மேற்கு வீதியில் அப்பருக்கும் தினமும் ஒரு படிக்காசு வைத்தருளினார். "படிக்காசுப் பிள்ளையார்" மேற்குப் பீடத்தின் அருகிலுள்ளார். பீடத்தருகே சம்பந்தர் - அப்பர் இருவரதும் திருவுருவங்களும் உள்ளன.

இந்த இடத்தில் ஒன்றைச் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது. இந்த இரு படிக்காசு பெற்ற பீடங்களையும் விட, தெற்கு வீதியில் "சுந்தரர் படிக்காசு பெற்ற இடம்" என எழுதப் பட்டு ஒரு பீடமும் உள்ளது. ஆனால் திருவீழிமிழலையில் "சுந்தரர் படிக்காசு பெற்றார்" என்பதற்கான குறிப்பு எதுவும் பெரியபுராணத்தில் இல்லை. ஆகவே இதனை சைவ சமய ஆய்வாளர்கள் புரிய வைக்க வேண்டும்.

ஞானசம்பந்தரும், அப்பரும் இறைவனிடம் பெற்ற படிக்காசுகளைக் கடைத் தெருவுக்குக் கொண்டு விற்றுப் பொருள் வாங்கிய இடம் இன்று "ஐயன்பேட்டை" என வழங்கப்படுகிறது. அங்குள்ள கோவிலின் சுவாமி பெயர் செட்டியப்பர். அம்பாள்- படியளந்தநாயகி. உற்சவமூர்த்தி தராசு ஏந்திய கையுடனும், அம்பாள் கையில் அளவையிடும் படியைப் பிடித்த கையுடனும் காட்சி தருகின்றனர். இந்தப் பந்தியில் உள்ள விபரம் கோவில் அர்ச்சகர் கூறியதாகும். கோவிலைத் தரிசிக்கும் வாய்ப்பு நமக்குக் கிட்டவில்லை.

கருவறை விமானம் "விண்ணிழி விமானம்" எனப்படுகிறது. விமானம் முழுவதும் செப்புத் தகடுகளால் வேயப்பட்டு, தங்கக் கலசம் வைக்கப்பட்டு, காலைநேர வெய்யிலில் தகதகவெனப் பிரகாசித்து தனியழகு காட்டுகிறது. சம்பந்தரின் விருப்பத்தை நிறைவு செய்ய இறைவன் சீர்காழிக் காட்சியினைக் காட்டிய நிகழ்வினை சிற்பங்களாக வடிவமைத்துள்ளனர். உள்ளே கருவறையில் மூலவர் வீழியழகீசர் நிறைந்த அலங்காரத்துடன் அருள் பாலிக்கிறார்.

மூலவரின் (வீழியழகீசரின்) பின்புறம் நின்றபடியான அமைப்பில் அம்மையும் - அப்பனும் திருமணக் கோலம் காண்பித்து நிற்கின்றனர். திருவீழிமிழலை சிவன் - அம்பாள் திருமணம் நடைபெற்ற இடமாகக் கருதப்படுவதால் கருவறை வாசலில் "அரசாணிக்கால்" எனும் தூணும், வெளியில் மகாமண்டபத்தில் "பந்தல்கால்" எனும் தூணும் உள்ளன. திருமணக் கோலம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

மகா மண்டபத்தில் தனிச் சந்நிதியில் கல்யாண சுந்தரர் - மாப்பிள்ளை சுவாமியாகக் காட்சி தருகிறார். சுவாமியின் பாதத்தில் விஷ்ணு அர்ச்சித்த மலராகிய கண்ணின் அடையாள மும் சக்கரமும் உள்ளது. அர்ச்சகர் காண்பிக்க தீப ஒளியில் இதனைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

உட்பிரகாரத்தின் வடக்கு - தெற்கு வீதியின் அருகேயுள்ள உயர்ந்த - நீண்ட மண்டபங்களில் நெல் பரவப்பட்டுள்ளது. பின் பிரகாரத்தில் கணபதி, வள்ளி - தெய்வானை சமேத ஆறுமுகர், செல்ல தியாகேசர், சம்பந்தர், சுந்தரர், ஸ்ரீ கஜலெட்சுமி ஆகியோர் உள்ளனர். சண்டிகேசுவரர் தனிச் சந்நிதியில் அமர்ந்துள்ளார். எதிரே "பாதாள நந்தி" உள்ளார். பலபடிகள் கீழிறங்கிக் குனிந்தபடி உள்ளே போய் பாதாள நந்தியைத் தரிசிக்க

வேண்டும். கிழக்குச் சுற்றில் (இரண்டாம் கோபுர வாசலின் இரு மருங்கும்) ஸ்ரீ ஆடல் வல்லான், ஸ்ரீ மெய்கண்டார், ஸ்ரீ காளத்தீஸ்வரர், ஸ்ரீ பைரவர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி, சூரியன், ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ சனீஸ்வரன் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

இந்தக் கோவிலின் உள்ளும் புறமுமாகப் பல்வேறு தீர்த்தங்கள் காணப்பட்டபோதும் மேற்கு மதிற்சுவரைச் சார்ந்துள்ள விஷ்ணு தீர்த்தமே ஸ்தலத் தீர்த்தமாகக் கொள்ளப்படுகிறது.

சித்திரை மாதப் பெருவிழாவும், பிரதோஷம், நவராத்திரி, சஷ்டி, கார்த்திகை ஆகிய பல்வேறு விழாக்களும் சிறப்புற நடைபெறுகின்றன.

"பங்கயம் ஆயிரம் பூவினி லோர்பூக் குறையத்
தங்கண் இடந்துஅரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற்கருளிய வா(று)
எங்கும் பரவிநாம் தேணோக்கம் ஆடாமோ"

-திருவாசகம்-

"நீற்றினை நிறையப் பூசி நித்தல் ஆயிரம் பூக் கொண்டு
ஏற்றுளி ஒருநாள் ஒன்று குறையக்கண் ணிறைய விட்ட
ஆற்றலுக் காழிநல்கி அவன் கொணர்ந்திழிச்சுங் கோயில்
வீற்றிருந்தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்தனாரே"

-அப்பர்-




ஞானச்சுடர் உ 2015 புரட்டாதி மலர்

# ஐப்பசிமாத வாராந்த நிகழ்வுகள்

02.10.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "சந்நிதி வேலே சரணம்"

வழங்குபவர்கள் :- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்

---

09.10.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

16.10.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

---

23.10.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- திரு A.K. கருணாகரன்அவர்கள்

[சங்கீத வித்துவான்]

---

30.10.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் ஐப்பசிமாத வெளியீடு

214ஆவது மலர்

வெளியீட்டுரை :- திரு சி. பத்மநாதன் J.P அவர்கள்

மதிப்பீட்டுரை :-சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள்

[ஆசிரியர்]

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

